# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 138 குரோதி வருடம், மார்கழி மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை
(01.01.2025) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 30, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12


## கமென்ட் கந்தர்...

புதிய வருஷம்.. புதிய ஆட்சியாளர்கள்... நாட்டுக்கு நல்லது நடக்கட்டுமென வேண்டுவம்






## 2025 புதிய மாற்றங்களுக்கான சிறந்த வாய்ப்பாக அமையட்டும்

### ஜனாதிபதி அநுரவின் புத்தாண்டு வாழ்த்து



வளமான நாடு, அழகான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி,...

»02பக்கம்

## 2025 வரவு - செலவுத்திட்ட முன்மொழிவு பெப்.17இல்

புதிய நிதியாண்டுக்காக (2025ஆம் ஆண்டு) வரவு - செலவுத்திட்ட விவாதம் 2025 பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் நேற்று (31) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இணங்கியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக்காக ஜனவரி 09ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுமெனவும் இரண்டாவது மதிப்பீடு பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு பெப்ரவரி 25 இல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

## சவால்களை எதிர்கொள்ள எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்

### புதுவருட வாழ்த்தில் சஜித்



''நாட்டின் எதிர்காலத்துக்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புது வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். எமது நாட்டின் தற்போதைய சவால்களை சரியாக அடையாளம் கண்டு...

» 02 பக்கம்

## அரச இணையங்கள் மீது சைபர் தாக்குதல்




அரச அச்சகத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ யூரியூப் செனல் என்பவற்றின் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகபூர்வ யூரியூப் செனலை வழமைக்கு கொண்டுவரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்துள்ளார்.

» 02 பக்கம்

### - புலமைப்பரிசில் பரீட்சையில் இலவசப் புள்ளிகள் -

# உயர்நீதிமன்றம் குட்டு வைத்தது!

### அடிப்படை மனித உரிமை மீறலென சாடல்; பொருத்தமான பரிந்துரைக்கும் உத்தரவு



கே.சுபானி

"2024ஆம் ஆண்டுக்கான தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் முற்கூட்டியே வெளியான முதல் மூன்று வினாக்களுக்கும் இலவசப் புள்ளிகளை வழங்குவது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்''- என உயர் நீதிமன்றம் நேற்று (31) தீர்ப்பளித்துள்ளது.

இதனடிப்படையில் முற்கூட்டியே வெளியான முதல் மூன்று வினாக்களுக்கும் இலவசப் புள்ளிகளை வழங்குவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் எடுத்த முடிவு மற்றும் கடந்த நவம்பர் மாதம் 25ஆம் திகதி அமைச்சரவை...

» 02 பக்கம்

## உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு நாளை முதல்




கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் நாளையிலிருந்து (02) ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.


அத்துடன், புதிய கல்வியாண்டு....

» 02 பக்கம்











## பச்சையரிசிக்கு தட்டுப்பாடு

### விநியோகம் குறித்து அரசு தீவிர கவனம்

அநேக கிராமிய பிரதேசங்களில் பச்சையரிசி, சிவப்புப் பச்சையரிசி மற்றும் நாட்டரிசி என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டின் ஒருசில பிரதேசங்களில்...

» 02 பக்கம்

### உஷ்



இராணுவ சேவையிலிருந்து நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ள ஜெனரல் சவேந்திர சில்வா, முழுநேர அரசியலுக்கு வர திட்டங்களைத் தீட்டி வருகிறாராம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதுதான் அவரது எண்ணமென உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன. சில மேலைநாடுகளும் அவர் பின்னால் இருப்பதாகத் தெரிகிறது.






»09 பக்கம்

## 24 அமைச்சுகளை விசாரிக்க விசேட குழு

### இலஞ்சம், ஊழல் குறித்தும் ஆராய்வு

இருபத்து நான்கு அமைச்சுகள் தொடர்பில் விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கமைய, இந்தக் குழுவினூடாக...

» 02 பக்கம்




## உயர்தரப் பரீட்சை...

ஜனவரி 27 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதால் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கமைய ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் மற்றும் வெட்டுப்புள்ளிகளை வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (31) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சைகள் நேற்றுடன் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. விடைத்தாள்களுக்கு புள்ளி வழங்கும் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. பல்வேறு கட்டங்களாக மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறும்.

முதலாம் கட்ட மதிப்பீட்டுப் பணி நாளையிலிருந்து ஆரம்பமாகும். அடுத்தகட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் 10ஆம், 18 ஆம், பெப்ரவரி முதலாம் திகதி மற்றும் பெப்ரவரி 18 ஆம் திகதி ஆகிய நாட்களில் பல கட்டங்களாக விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறும். இது பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும் காலப் பகுதி என்பதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த விடைத்தாள் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

எனவே, உயர்தரப் பரீட்சை நிறைவடைந்து நான்கு மாதங்களில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படும். அந்தக் காலப் பகுதியை இம்முறை குறைத்துக்கொள்ள எதிர்பார்க்கிறோம். எனவே, எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இறுதிப் பரீட்சை முடிவுகளை வெளியிடக் கூடியதாக எதிர்பார்த்துள்ளோம். தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் வெளியிட நாங்கள் எதிர்பார்த்தாலும் நிலைமையைப் பொறுத்து அதில் மாற்றம் ஏற்படலாம்.

இதேவேளை, ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இது தொடர்பில் தீர்மானமெடுப்பது தொடர்பிலும் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள தீர்வுகளில் சிறந்த பரிந்துரையொன்றைத் தெரிவுசெய்து அதுதொடர்பில் பரிசீலனை செய்து அதனடிப்படையில் செயற்படுமாறும் அத்துடன், பரீட்சை மதிப்பீடுகளை மேற்கொண்டு பரீட்சை முடிவுகளை வெளியிடுமாறும் எனக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்றத் தீர்ப்பை நன்கு ஆராய்ந்ததன் பின்னர் மிக விரைவில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். புதிய கல்வியாண்டு எதிர்வரும் ஜனவரி 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதன்போது புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் ஆறாம் தரத்துக்குச் செல்லவேண்டும். நாட்டில் 3,000 க்கும் மேற்பட்ட ஆரம்ப பாடசாலைகள் இருக்கின்றன. அவர்கள் உயர்கல்விக்காக வேறு பாடசாலைகளுக்குச் செல்லவேண்டியுள்ளது. இந்தச் சகல விடயங்கள் குறித்தும் கவனஞ்செலுத்தி பெறுபேறுகளை வெளியிடவும் வெட்டுப்புள்ளிகளை வெளியிடவும் நடவடிக்கை எடுப்போம்.

பொதுவாக புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளை வெளியிட 40 நாட்களாவது தேவைப்படும். இம்முறை உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகள், சாதாரண தரப் பரீட்சைக்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளுடனேயே இது தொடர்பிலும் கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது'' - என்றார்.

## சவால்களை...

எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்'' - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவரின் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும், ''எமது தாய்நாடு தற்போது எதிர்கொள்ளும் சவால்களை சரியாக அடையாளங்கண்டு அவற்றை வெற்றிகொள்ளத் தேவையான ஆற்றல், வலிமை மற்றும் தொலைநோக்குடன் செயற்பட புது வருடத்தில் நாம் அனைவரும் உறுதிபூண வேண்டும். இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும்.

கடந்த காலத்தைப்போல குறுகிய இன, மத கருத்துகளால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பது மிக முக்கியம். அத்துடன், கடந்த நான்கு வருடங்களாக நாட்டு மக்கள் எதிர்கொண்ட நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றங்களை முடிவுக்கு கொண்டுவந்து, மக்கள் தாய்நாட்டில் தங்கியிருக்க ஏதுவான பொருளாதார, அரசியல், சமூக சூழலை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும். இதில் நாம் செய்ய வேண்டியது அமைதியின்மையை இல்லாதொழித்து நிம்மதியை வெற்றிபெறச்செய்வதற்கான பாதையை சரியாகத் தெளிவுபடுத்திக் கொள்வதாகும்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிதைந்துள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப புதிய பொருளாதாரத் திட்டமும் செயல்முறையும் தேவை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, நாட்டின் எதிர்காலத்துக்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புதுவருடத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்''- என்று குறிப்பிட்டுள்ளார்.

**பெயர்மாற்றம்**

கல்முனை, நற்பிட்டிமுனை இலக்கம் 174 வீ.வீ.வீதியைச் சேர்ந்த (கல்முனை அரசாங்க அதிபர் பிரிவு நற்பிட்டிமுனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள எனது அடையாள அட்டை இலக்கம் 200130604135) கொண்ட முகமது சலீன் முகமட் அப்னாஸ் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை முகமட் சலீன் அப்னாஷான் என மாற்றம் செய்துள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

ஒப்பம்
எம்.அப்னாஷான்.

**பகிரங்க ஏல விற்பனை**

எமது கிளைகளில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தகாலம் முடிவடைந்தும், இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் 2024 டிசம்பர் 30 ஆம் திகதி விற்பனை செய்யப்பட இருந்த நிலையில், அந்த ஏலம் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு (மு.ப 9.30 முதல் பி.ப 2.30 வரையில்) ஒத்திவைக்கப்பட்டுள்ளமையை பணிவுடன் அறியத்தருகின்றோம்.

தங்களின் அசௌகரியத்துக்கு வருந்துகின்றோம்.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08

## பச்சையரிசிக்கு...

சிவப்புப் பச்சை அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்குமென்றும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (31) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரிசி நெருக்கடியின் காரணமாக அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர்மானம் எடுத்தது. அதற்கமைய அரிசியை இறக்குமதி செய்ய தனியார் துறைக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 77,000 மெட்ரிக் தொன் அரிசி கிடைத்துள்ளது. மேலும், 11,000 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி துறைமுகத்தில் இருக்கிறது. அதனையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். பெருந்தொகை அரிசி நாட்டை வந்தடைந்துள்ளது.

எனவே, தனியார் துறையினரின் அரிசி விநியோக செயற்பாடுகளில் சிக்கல் இருக்கலாம். ஒருசில இடங்களில் சிவப்புப்பச்சை அரிசிக்கான தட்டுப்பாடு இருக்கிறது. அதற்காக முழுமையாக அரிசித் தட்டுப்பாடு இல்லை. அவ்வாறான பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

அரிசி இறக்குமதி செய்வதைப் போன்று இம்மாதம் இடைப்பகுதியிலிருந்து தேசிய அரிசி உற்பத்தியாளர்களிடமிருந்தும் அரிசி கிடைக்கப்பெறும். அதனையும் கவனத்தில் கொண்டே இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.

அதற்காக இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரிக் குறைப்பு இடம்பெறாது. வரியைக் குறைத்தால் தேசிய விவசாயிகளினால் அந்தத் தொகைக்கு அரிசியை விநியோகிக்க முடியாது. அதேபோல், அரிசிக்கான விலைக்குறைப்பும் இடம்பெறாது. தற்போதுள்ள விலை அவ்வாறே பேணப்படும்''- என்றார்.

## புலமைப்பரிசில்...

தீர்மானத்தின்படி எடுக்கப்பட்ட முடிவும் செல்லுபடியற்றதாகிறதெனவும் நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பரீட்சைக்கு முன்னதாகவே வெளியான மூன்று வினாக்களுக்காக இலவசப் புள்ளிகளை வழங்குதல், அம்மூன்று வினாக்களையும் நீக்குதல் மற்றும் முன்னரே கசிந்த முதலாவது வினாத்தாளை நீக்கி புதிதாக பரீட்சை நடத்துதல் உள்ளிட்ட மூன்று பரிந்துரைகளை புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நிபுணர்கள் குழுவினால் முன்வைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட மூன்று பரிந்துரைகளில் பொருத்தமான பரிந்துரையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் மூன்று வினாக்கள் முன்கூட்டியே வெளியானதன் காரணமாக, அப்பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இலவச மதிப்பெண்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தது. பரீட்சை வினாத்தாளின் முதல் மூன்று வினாக்களுக்கு இலவசப் புள்ளிகளை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என தீர்ப்பளிக்குமாறு கூறி மனுதாரர்கள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று (31) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, ''அண்மையில் நிறைவடைந்த தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் முன்கூட்டியே வெளியான மூன்று வினாக்களுக்கு இலவச மதிப்பெண்கள் வழங்குவது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்''- எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், வல்லுநர்கள் முன்வைத்த மூன்று பரிந்துரைகளில் பொருத்தமான பரிந்துரையைத் தெரிவு செய்து, உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு நீதியரசர் குழாம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த வினாத்தாள் வெளியானதில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்களான, ஐ.ஜி.எஸ். பிரேமதிலக்க மூன்று மில்லியன் ரூபாவையும் பாடசாலை ஆசிரியரான சமிந்த குமார இலங்கசிங்க இரண்டு மில்லியன் ரூபாவையும் அரசாங்கத்துக்கு அபராதத் தொகையாகச் செலுத்தவேண்டுமெனவும் உத்தரவிட்ட மூவரடங்கிய நீதியரசர் குழாம், அபராதத் தொகையை நேற்று (31) முதல் நான்கு வாரத்துக்குள் செலுத்திமுடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளது.

மேலும் இச்சம்பவத்தில் அபராதம் செலுத்த உத்தரவிடப்பட்டவர்களால் இலஞ்சம் பெறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நீதியரசர் குழாமினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் பொதுப் பரீட்சைகளின்போது அதன் நம்பகத்தன்மையை பாதுகாப்பதில் கவனம் செலுத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு மற்றுமொரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## அரச இணையங்கள்...

இதேவேளை, அரச அச்சகத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தின் மீதும் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் கணினி அவசர பதிலளிப்பு பிரிவினால் உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த சைபர் தாக்குதலின் காரணமாக நேற்று (31) மாலை வரை அந்த இணையத்துக்குள் பிரவேசிக்கும் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில், அரச இணையதளங்கள் மீது மேற்கொள்ளப்படும் சைபர் தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கணினி அவசர பதிலளிப்புப் பிரிவின் பிரதான தகவல் சட்ட அதிகாரி நிரோஷ் ஆனந்த கூறுகையில்,

''அரச அச்சகத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தை வெளித் தரப்பினர் அவசியமின்றி உள்நுழைந்து அதன் செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்கள். இது தொடர்பில் கணினி அவசர பதிலளிப்பு பிரிவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, பொலிஸ் திணைக்களத்துக்குரிய உத்தியோகபூர்வ யூரியூப் செனலிலும் அவசியமின்றி வெளித்தரப்பினர் உள்நுழைந்திருக்கிறார்கள். அது தொடர்பிலும் தனிக்குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இணையதளங்களை மேம்படுத்திக்கொண்டு அதற்கு அவசியமாக பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவித்திருக்கிறோம். இதுபோன்று தொடர்ச்சியாக இடம்பெறும் சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான விதிமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளுமாறும் அறிவித்திருக்கிறோம்'' - என்றார்.

## 24 அமைச்சுகளை...

முன்னாள் அரசாங்கங்களில் அந்த அமைச்சுகளில் இடம்பெற்றுள்ள இலஞ்சம், ஊழல் தொடர்பில் விசாரணை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சுகளிடமிருக்கும் தகவல்களின் அடிப்படையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறியமுடிகிறது. இந்த யோசனைக்கு நேற்று முன்தினம்(30) நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

இதேவேளை, 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை திருத்தம் செய்வது தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை யோசனைக்கும் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதேபோன்று, முன்னாள் அரசாங்கங்களின் கீழ் அரச நிறுவனங்கள் செயற்பட்டுள்ள விதம் தொடர்பிலும் தற்போது அரச நிறுவனங்களில் இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பிலும் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள், விளக்களித்தல் மற்றும் பல்வேறு மூலங்களிலிருந்து தெரியவரும் தகவல்கள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் நாடு தழுவிய சேவையின் முதலாம் தர நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் விசாரணை அலகை நிறுவுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 2025 புதிய...

புதிய உறுதிப்பாடுகளை மனதில்கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக தான் உறுதியாக நம்புவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும், நாடும் நாட்டு மக்களும் பல தசாப்த காலமாகக் கண்ட நல்ல கனவுகள் நனவாகும் புதிய யுகத்தின் உதயத்துடன், 2025 புத்தாண்டில் இலங்கையர்களாகிய நாம் அடியெடுத்து வைக்கின்றோம். வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்று 2024ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க எம்மால் முடிந்தது.

அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் தற்போது துரிதமாக செயற்பட்டு வருகின்றோம். கிராமிய வறுமையை ஒழித்தல், கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்தப் பின்னணியில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பரிமாற்ற ரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக நாடென்ற ரீதியில் நாம் 2024ஆம் ஆண்டில் நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கிறோம். அனைவருக்கும் வளமான நாடு, அழகான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி, புதிய உறுதிப்பாடுகளை மனதில் கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன். சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய அரசாங்கத்தை உருவாக்கி, அனைத்து மக்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தியடைந்த இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் வாய்ப்பு உங்களுக்கும் எமக்கும் கிடைத்துள்ளது. விட்டுக்கொடுக்க முடியாத இந்தப் பாரிய பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம்.

தேசிய மறுமலர்ச்சிக்காக எங்களுடன் இணைந்து பங்காற்றும் உங்கள் அனைவருக்கும் செழுமையும் ஒற்றுமையும் புதிய நம்பிக்கையும் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! - என்று குறிப்பிட்டுள்ளார்.




**01. 2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2024.11.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. பணக் கொள்கைக் கட்டுக்கோப்பு உடன்படிக்கை தொடர்பான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான இலக்குகள் முதன்மைப் பணவீக்கம் பணச்சுருக்கம் தொடர்பான அறிக்கையைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல்**

2023 ஆம் ஆண்டின் 16ம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் பணக் கொள்கைக் கட்டுக்கோப்பு உடன்படிக்கைக்கமைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் அளவிடப்படும் காலாண்டுக்கான முதன்மைப் பணவீக்கம் 5% வீதத்தால் பேணிச் செல்லும் பொறுப்பு இலங்கை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிதி விடயதான அமைச்சர் சமர்ப்பித்துள்ள முதன்மைப் பணவீக்கம் பணச்சுருக்கம் தொடர்பாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. அரச முதலீட்டுக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடைய துரித மூலோபாயங்களைத் தீர்மானிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்றை நியமித்தல்**

அபிவிருத்திக் கருத்திட்டங்கள்/வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு பிரச்சினைகளைத் தடுப்பதற்கும், கருத்திட்ட முகாமைத்துவத்துக்கும் மேற்பார்வைக்கும் ஏற்புடையவாறு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை முன்மொழிவதற்கும் இயலுமாகும் வகையில் ஜனாதிபதி செயலாளரால் நியமிக்கப்படும் அமைச்சின் செயலாளர்கள் இருவர் மற்றும் ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் உள்ளிட்ட 11 உறுப்பினர்களைக் கொண்ட 'அரச முதலீட்டு மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக் குழுவை' நியமிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கையின் முதலாவது இருதரப்பு வெளிப்படைத்தன்மை பற்றிய அறிக்கை காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுக்கோப்பு சமவாயத்துக்குச் சமர்ப்பித்தல்**

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கட்டுக்கோப்பு சமவாயத்தின், காலநிலை தொடர்பான அரசுகளுக்கிடையிலான அமைப்பு மற்றும் பரிஸ் உடன்படிக்கையின் வழிகாட்டல்களுக்கமைய இலங்கையின் முதலாவது இருதரப்பு வெளிப்படைத்தன்மை பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கட்டுக்கோப்பு சமவாயத்துக்கு சமர்ப்பிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட நெற் கொள்வனவுக்கான அடகுக் கடன் முறை 2024/2025 பெரும்போகத்திலிருந்து வருடாந்த வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தல்**

திட்டவட்டமான அளவுகோல்களின் பிரகாரம், நாளாந்த நெல் குற்றும் கொள்ளளவு உயர்ந்தபட்சம் 25 மெற்றிக்தொன் வரைக்கும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுக்கு (கூட்டுறவுச் சங்க நெல் ஆலைகள் உள்ளடங்கலாக) அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் சலுகை வட்டி வீதத்தில் உயர்ந்தபட்சம் 50 மில்லியன் ரூபா வரைக்கும் நெல் கொள்வனவுக்கான அடகுக் கடன் முறையை அமுல்படுத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியேறல்/நடமாடல் பிரதேசத்தில் பிரபல வர்த்தக நாமங்களுக்குரிய பெண்கள் மற்றும் ஆடவர்களுக்கான புடவை விற்பனை நிலையங்களை நடத்துதல்**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியேறல்/நடமாடல் பிரதேசத்தில் பிரபல வர்த்தக நாமங்களுக்குரிய பெண்கள் மற்றும் ஆடவர்களுக்கான புடவை விற்பனை நிலையங்கள் 04 ஐ 03 ஆண்டுகளுக்கு நடத்திச்செல்வதற்கான இயக்குநர்களைத் தெரிவுசெய்வதற்காக சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் முறைமையைக் கடைப்பிடித்து விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்காக 03 விலைமனுதாரர்கள் விலைமுறிகளைச் சமர்ப்பித்துள்ளனர். அதற்கிணங்க, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் பிரகாரம், இரண்டு விற்பனை நிலையங்களை நடத்திச் செல்வதற்காக இயக்குநர்களாக முறையாக M/s Odel PLC மற்றும் M/s Insomnia (Pvt) Ltd.இனைத் தெரிவுசெய்வதற்கும் விற்பனை நிலையங்களுக்கு மீண்டும் விலைமனுக்களைக் கோருவதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 9,00,000 மெரபொனம் ஊசி (Meropenem injection) 01 கிராம் குப்பிகளை விநியோகிப்பதற்கான பெறுகை**

தீவிர பற்றீரியாத் தொற்றுக்களுக்கு சிகிச்சையளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மெரபொனம் ஊசி 01 கிராம் குப்பிகள் 9,00,000 ஐ விநியோகிப்பதற்காக சர்வதேச போட்டி விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அதற்காக 05 விலைமுறிகள் சமர்பிக்கப்பட்டுள்ளதுடன், விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளைக் கொண்ட குறைந்த விலைமுறிதாரரான பாகிஸ்தான் d; M/s Genix Pharma (Pvt) க்கு குறித்த பெறுகையை வழங்குவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழு விதந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, 9,00,000 மெரபொனம் ஊசி 01 கிராம் குப்பிகளை விநியோகிப்பதற்கான பெறுகையை குறித்த கம்பனிக்கு வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. டெனெக்டிப்ளேஸ் ஊசி ((Tenecteplase injection) 40 மில்லிகிராம் குப்பிகள் 9,000 விநியோகிப்பதற்கான பெறுகை**

இதய நோயாளிகளின் மரணத்தைத் தடுப்பதற்காக பயன்படுத்தப்படும் டெனெக்டிப்ளேஸ் ஊசி ((Tenecteplase injection) 40 மில்லிக்கிராம் குப்பிகள் 9,000 கொள்வனவுக்காக சர்வதேச போட்டி விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அதற்காக 03 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய, விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளைக் கொண்ட குறைந்த விலைமுறிதாரரானd M/s ABC Pharma Services (Pvt) Ltd இற்கு குறித்த பெறுகையை வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு இரண்டு மாடிகளைக் கொண்ட வார்ப்பிரும்புக் கட்டமைப்பிலான களஞ்சியமொன்றை நிர்மாணித்தல்**

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு இரண்டு மாடிகளைக் கொண்ட வார்ப்பிரும்புக் கட்டமைப்புக் களஞ்சியமொன்றை இரத்மலானையில் நிர்மாணிப்பதற்கான தேசிய விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அதற்காக 10 விலைமுறிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய, விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளைக் கொண்ட குறைந்த விலைமுறிதாரரான , M/s Dockyard General Engineering Services (Pvt) Ltd க்கு குறித்த பெறுகையை வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. புவியியற்சார் குறிகாட்டிகளைப் பதிவுசெய்வதற்காக 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகள்.**

புவியியற்சார் குறிகாட்டிகளைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குவிதிகள் 2024.10.22 திகதிய 2407/04 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. மேற்குறித்த ஒழுங்குவிதிகளை அங்கீகரிப்பதற்கென பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**11. அரச அலுவலர்களின் பிணை கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தை ஆராய்ந்து பொருத்தமான திருத்தங்களை விதந்துரை செய்வதற்காக பிரதான தரப்பினர் மற்றும் மின், வலுசக்தித்துறை கொள்கை நிபுணர்கள் அடங்கிய குழுவை நியமிக்க மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவம்.**

ஆணைக்குழுக்கள், அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சபை நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளின் ஆளணியை மீளாய்வு செய்து இன்றியமையாத ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கும், சேவை தேவைகளுக்கு ஏற்ப ஆளணியை மீள நிலைப்படுத்தி உச்ச சேவையைப் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையிலான அலுவலர் குழுவை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. அரசாங்க அழுத்தகர் பதவிக்கு நியமனம் செய்தல்.**

அரச அச்சக திணைக்களத்தில் அரசாங்க அழுத்தகர் பதவியில் சேவையாற்றும் திருமதி ஜி. கே.டி.லியனகேயின் சேவைக்காலம் 2024.12.24 திகதி முடிவடைந்த பின்னர் குறித்த பதவி வெற்றிடமாக இருக்கும் மேற்குறித்த பதவிக்கு பொருத்தமான அலுவலரை நியமிக்க வேண்டியுள்ளது. தற்போது தேசிய வரவு - செலவுத் திட்ட திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவியில் பணியாற்றும் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அலுவலர் கே.ஜி.பி. புஸ்பகுமாரவை நியமிப்பது பொருத்தமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்குறித்த அலுவலரை நியமிப்பதற்காக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தை திருத்தம் செய்தல்**

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகளை ஆய்வுசெய்து கட்டாயமாக திருத்தம் செய்ய வேண்டிய பிரிவுகள் மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய பிரிவுகள் தொடர்பான விதந்துரைகள் அடங்கிய விபரமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஓர் ஆணையாளரின் தலைமையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்களை உள்ளடக்கிய குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. அரச நிறுவனங்கள் பொதுமக்களுக்கு வகைகூறுதலை உறுதிசெய்வதற்காக அமைச்சுகளில் விசாரணை அலகுகளை நிறுவுதல்.**

தற்போது அரச சேவை தொடர்பில் நாளாந்தம் அதிகளவு முறைப்பாடுகள் பெயர் குறிப்பிட்டும், அநாமதேயமாகவும் ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கிடைத்து வருகின்றது. அரசு மீது மக்கள் வெளிப்படுத்தியுள்ள நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும் குறிப்பாக, அரச சேவையில் எதிர்பார்க்கப்படும் சாதகமான மாற்றங்களை மேற்கொள்வதற்காக அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக பக்கச்சார்பற்ற வகையிலும் மற்றும் விஞ்ஞான ரீதியாகவும் விடயங்களை விசாரணை செய்ய வேண்டியுள்ளது.

அதற்கமைய, முன்னைய அரசுகளின் கீழ் அரச நிறுவனங்கள் செயற்பட்டுள்ள விதம் தொடர்பிலும், தற்போது அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள், விளக்களித்தல் மற்றும் பல்வேறு மூலங்களிலிருந்து தெரியவரும் தகவல்கள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் நாடு தழுவிய சேவையில் முதலாம் தர அலுவலர் அல்லது புலனாய்வுச் செயன்முறை தொடர்பான அனுபவமுள்ள அரச சேவையின் முதலாம் தர நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் விசாரணை அலகை நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மார்கழி மாதம் 17ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் தேவைக்கான பண வரவு உண்டு. சுறுசுறுப்பாக செயற்படுங்கள்.

**ரிஷபம்** எதிர்பாராத சுபசெய்தியால் மனமகிழ்ச்சி உண்டு.தெய்வதரிசனம் செய்துகொள்வீர்கள்.

**மிதுனம்** மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டாவாதம் செய்ய வேண்டாம். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம்** தொழிலிடத்திலுள்ள பெண் உத்தியோத்தர்களால் இலாபங்கள் உண்டு.காதல் களியாட்டங்களில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்** உடல், மனம் சோம்பிக் காணப்படும்.வீண் டென்ஷன் வேண்டாம். தொழில் விடயத்தில் அக்கரையோடு செயல்படுங்கள்.

**கன்னி** தேவைக்கேற்பப் பணம் ஏதோவழி யில் வந்து மகிழ்விக்கும்.குழப்பமற்ற மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

**துலாம்** திட்டமிட்ட பயணங்களால் இலாபம் உண்டு. தாய் மற்றும் தாய்வழி உதவிகள், வாகன சுகம் உண்டு.

**விருச்சிகம்** புத்திசாதுர்யமாக அனைத்திலும் வெற்றிகாண்பீர்கள். அத்தியாவசியச் செலவுகள் இருக்கும்.

**தனுசு** திடீர் பணவரவுக்கான வாய்ப்பு உள்ளது. வாதத்திறமையைக் காட்டுவீர்கள். குடும்பசுகம் உண்டு.

**மகரம்** தேவையற்ற கவலைகளை விட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் இருங்கள். உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்** வீணான டென்ஷன் வேண்டாம். உங்கள் பணம் பொருள்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**மீனம்** தொட்டது துலங்கும் நாள். மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள். வெற்றியுடன் வீடு திரும்புவீர்கள்.

**திதி:**துவிதியை பி.இ.2.24 வரை பின் திருதியை
**நட்சத்திரம்:**உத்திராடம் மு.இ.11.46 வரை பின் திருவோணம்
**பிறை:**வளர்பிறை
**யோகம் :**மரண யோகம் பி.இ.1.19 வரை பின் சித்த யோகம்
**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:**காலை 6.22 – 7.52 மணி வரை காலை 9.22 – 10.22 மணி வரை பகல் 1.52 – 3.22 மணி வரைமாலை 4.22 – 5.22 மணி வரை

**ராகு காலம்:**12.22 – 1.52 மணி வரை
**எமகண்டம் :**7.52 – 9.22 மணி வரை
**குளிகை :**10.22 – 12.22 மணி வரை
**சந்திராஷ்டமம்:**மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 11.46 மணி வரை**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முன்னிரவு 11.46 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** சந்திர தரிசனம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அதிகமானோர் சென்ற ஆண்டாக 2024 ஆம் ஆண்டு பதிவு

## அதிக இலங்கையர்கள் சென்ற நாடு குவைத்

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக 2024ஆம் ஆண்டு 3 இலட்சத்து 12 ஆயிரத்து 836 பேர் வெளிநாடு சென்றுள்ள நிலையில், இதுவரையில் அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்கள் வேலைக்காக இடம்பெயர்ந்த ஆண்டாக கடந்த 2024ஆம் ஆண்டு வரலாற்று சாதனைப் படைத்துள்ளது.

கடந்த ஆறு வருடங்களில் (2019-2024), 1.3 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர்.

இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 162 ஆண்களும் ஒரு இலட்சத்து 27ஆயிரத்து 674 பெண்களும் தொழிலுக்காக வெளிநாடு சென்றுள்ளனர். இவர்களுள் குவைத் நாட்டுக்கு 77ஆயிரத்து 546 பேர் சென்றுள்ளனர். 2024 ஆம் ஆண்டில் இலங்கைத் தொழிலாளர்களின் முதன்மையான தெரிவாக குவைத் இடம்பிடித்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு 51ஆயிரத்து 550 இலங்கைத் தொழிலாளர்கள் சென்றுள்ளனர்.இலங்கையர்கள் அதிகமாகச் சென்ற இரண்டாவது நாடாக இதுவிளங்குகிறது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் தென் கொரியா, இஸ்ரேல் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் வேலைக்கு செல்வோரின் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டு, தென் கொரியாவில் 7,098 இலங்கையர்களும் இஸ்ரேலில் 9,665 பேரும் ஜப்பானில் 8,665 பேரும் பணிபுரிந்துள்ளனர் - இது கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகிறது.

வெளிநாட்டு ஊழியர்கள் பணம் அனுப்புவதும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. 2024 நவம்பர் இறுதிக்குள், இலங்கை அதன் வெளிநாட்டு பணியாளர்களிடமிருந்து 6,462 மில்லியன் அமெரிக்க டாலர் அந்நியச் செலாவணியைப் பெற்றுள்ளது.

இது தேசிய பொருளாதாரத்தில் தொழிலாளர் வகிக்கும் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஒப்பீட்டு அடிப்படையில், 2023 இல் 2 இலட்சத்து 97ஆயிரத்து 584 இலங்கையர்கள் வேலைக்காக வெளிநாடு சென்றுள்ளனர். இதில் ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 680 ஆண் தொழிலாளர்கள் மற்றும் ஒரு இலட்சத்து 32ஆயிரத்து 904 பெண் தொழிலாளர்கள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி செய்யப்பட்ட அரிசி சந்தைக்கு விடுவிப்பு

79 ஆயிரம் மெட்ரிக் தொன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி நேற்று (31) நண்பகல் 12 மணி நிலவரப்படி மொத்தமாக சுங்கத் திணைக்களத்தினூடாக விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

இதில் 31,000 மெட்ரிக் தொன் பச்சை அரிசி எனவும் 48,000 மெட்ரிக் தொன் புழுங்கல் அரிசி எனவும் இலங்கை சுங்க ஊடகப் பேச்சாளரும் மேலதிக பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்தார்.மேலும், இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப் பட்ட 780 மெட்ரிக் தொன் அரிசியும் இந்த கையிருப்பில் உள்ளடங்குவதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



அன்றும், இன்றும் என்றும் அனைத்து இலங்கையர்களுக்கும்
தேசிய பாதுகாப்பின் சக்தியை வழங்கும் பலம்பொருந்திய கரம்
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் இன் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

www.srilankainsurance.com

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

Company Registration Number - PB 286 *நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி 01 ஆம் திகதி, புதன்கிழமை

# ஆங்கில புத்தாண்டு பிறப்பும் சவால்களும்

புதிய பல எதிர்பார்ப்புகளை தந்து புதிய ஆட்சியின் கீழ் இன்று புதன்கிழமை 2025 ஆம் ஆண்டு பிறந்துள்ளது.

2022, 2023, 2024 ஆம் ஆண்டுகள் இலங்கையர்களாகிய எமக்கு மறக்க முடியாத ஆண்டுகளாக பதிவாகியதை மறுக்க முடியாது. அரசுக்கு எதிரான மிகப்பெரிய கிளர்ச்சிப் போராட்டம், தேர்தல் அல்லாத ஆட்சி மாற்றம், முன்னொருபோதும் அனுபவித்திராதளவுக்கு பொருளாதாரச் சுமை என அந்த ஆண்டு எமக்குத் தந்த நினைவுகளும் அதனால் கற்றுக்கொண்ட, கற்றுக்கொடுத்த பாடங்களும் இங்கே குறிப்பிடத்தக்கன.

சிங்கள மக்களின் வாக்குகளுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் பெற்றுக்கொண்ட கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மக்களின் நலன்பாராது எழுந்தமாறான தீர்மானங்களை எடுத்தது.

அரச நிறுவனங்களுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்தது மாத்திரமல்லாமல், நடைமுறைக்கு சாத்தியமற்ற முடிவுகள் உயர் பீடத்தினால் யாருடைய ஆலோசனைகளையும் பின்பற்றாமல் எடுக்கப்பட்டன.

இரசாயன உரப் பயன்பாட்டில் விவசாயிகளுக்கு காலக்கெடு விதிக்காமல் உடனடியாக தடை விதிக்கப்பட்டமையை இங்கு கட்டாயம் சுட்டிக்காட்ட வேண்டும். அதனால் நாடு முழுவதும் விவசாயிகளின் போராட்டம் வெடித்தது.

விவசாய விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாக பெருந்தொகையான பணம் செலுத்தி அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தேவை எழுந்தது மாத்திரமல்லாமல், சேதனப் பசளையை வெளிநாடுகளிலிருந்து கொண்டுவர வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. இதனால் விவசாயிகளும் பொதுமக்களும் வெகுண்டெழுந்தனர். இந்த எழுச்சியானது நாளுக்கு நாள் வீறுபெற்று இளைஞர்களின் போராட்டமாக வலுப்பெற்றது.

கொழும்பு, காலி முகத்திடலில் கூடிய போராட்டக்காரர்கள் அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதே சமகாலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின.

இந்தப் போராட்டத்தால் முழு உலகத்தின் பார்வையும் இலங்கையின்பால் ஈர்க்கப்பட்டது. நாளுக்கு நாள் போராட்டம் வலுப்பெற்றதன் காரணமாக ஜனாதிபதி கட்டாயமாக பதவி விலக வேண்டிய சூழ்நிலை உருவானது. ஒரு நாட்டின் அரச தலைவர் மக்களின் எதிர்ப்பு காரணமாக பின்கதவால் தப்பிச்சென்று வெளிநாட்டிலிருந்து பதவிவிலகல் கடிதத்தை அனுப்பும் அளவுக்கு மக்கள் சக்தி வெளிப்பட்டது.பொருளாதார நெருக்கடியால் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள், எரிவாயுவுக்காக நீண்ட வரிசை, பட்டினி போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் தமது ஆத்திரத்தை ஆட்சியாளர்கள் மீது காட்டத் தொடங்கினர். அதன் விளைவாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோரும் அமைச்சரவை அமைச்சர்களும் அடுத்தடுத்து பதவி விலகினர்.

நாட்டின் வருமானம் குறைவடைந்து அனைத்துத்துறைகளும் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாக உறுதிபூண்டு பாராளுமன்ற அங்கீகாரத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மக்கள் ஆணையில்லாமல், தேசியப் பட்டியல் ஊடாக தனியொரு மனிதனாக சிறு இடைவெளிக்குப் பிறகு பாராளுமன்றத்துக்கு வருகைதந்த ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓரளவு நம்பிக்கை தரும் வகையிலான மாற்றங்களை ஏற்படுத்தினாலும் அவரின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் தமிழ் பேசும் மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதில் ஆர்வம் காட்டி வந்தாலும் அது பேச்சளவில் மட்டுமே வரையறுக்கப்பட்டது. இந்த பின்னணியில்தான் கடந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் நடந்து நாட்டின் நிலைமையை தலைகீழாக மாற்றின. மூன்று வீதத்தில் இருந்தவர்கள் எப்படி ஆட்சியமைப்பாளர்கள் என்ற கேள்விகளையெல்லாம் தவிடுபொடியாக்கி ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியீட்டியது.

புதிய ஆட்சியாளர்கள் தேர்தல் மேடைகளில் சொன்னவற்றை யதார்த்தபூர்வமாக நிறைவேற்ற முடியாமல் தடுமாறுவதைக் காண முடிகிறது. எதிர்க்கட்சியில் இருந்து பேசுவதற்கும் ஆளுங்கட்சியில் இருந்து பேசுவதற்கும் இருக்கும் வித்தியாசங்களை இப்போதே ஆட்சியாளர்கள் உணர்கிறார்கள். ஊழல் மோசடி அரசியல்வாதிகளை கூண்டோடு கைது செய்வதாக கூறிய ஆட்சியின் பிரதிநிதிகள் இப்போதே மக்கள் எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளதை காணமுடிகிறது. இதனை நல்ல சமிக்ஞையாக நாம் கருதவில்லை. எனினும் 70 வருட முதலாளித்துவ அரசியலின் தாக்கங்களை ஒரே இரவில் சரிசெய்துவிட முடியாது என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டியதாக இருக்கிறது.

ஆனாலும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் புதிய ஆட்சியின் நல்லெண்ண சமிக்ஞைகள் யதார்த்தபூர்வமானதாக இல்லை. மாகாண சபைகளை இல்லாமலாக்கப் போவதாக ஆளுங்கட்சியின் ஒரு தரப்பு கூறுகிறது. அமைச்சரவையில் இஸ்லாமியர் ஒருவருக்கு இடமில்லை. க்ளீன் ஸ்ரீலங்கா என்ற நாட்டை மறுசீரமைக்கும் திட்டத்தில்கூட தமிழரோ முஸ்லிம்களோ இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ள மக்கள் அதிலிருந்து விரைவாக மீள முடியும் என புதிய ஆட்சியின்கீழ் மக்கள் நம்பத் தொடங்கிய சமயம், அவர்கள் மீது பெரும் வரிச்சுமை ஏற்றப்படப்போகிறது. தமிழர்களுக்கான அரசியல் தீர்வு வெறும் பேச்சளவில் இருக்கிறது. வழமைபோல புதிய அரசியலமைப்பு வரப்போகிறது என்ற கதை மட்டும் அடிக்கடி சொல்லப்படுகிறது. அந்த புதிய அரசியலமைப்பு தமிழர்களின் பிரச்சினைகளை உள்வாங்குமா என்பதற்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்தும் தலையாய கடமையும் பொறுப்பும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைவர்கள் முன்னுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியானது , இவ்வருடம் பொருளாதாரப் பிரச்சினையால் உழலப் போகும் மக்களை காப்பாற்ற ஏதாவது முயற்சிகளை எடுத்தாக வேண்டும். வரி அறவீடு அரசாங்க வருமானத்துக்கானது என்றாலும் அதிலிருந்து மக்களை காப்பாற்ற அல்லது மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏற்கனவே அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடும் விவசாயிகளின் போராட்டங்களும் ஆரம்பித்துள்ளதால் இந்த வருடம் அரசாங்கத்துக்கு சவால்மிக்கது.

2025 ஆம் ஆண்டின் உலகின் போக்கு மாறியிருக்கிறது. தெற்காசியாவின் சில நாடுகளில் ஸ்திரத்தன்மை குலைந்து போயுள்ளது. அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கவுள்ளார்.மேலும் சில அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இது தேர்தல் வருடம். உலகின் புதிய ஒழுங்குமுறையை அனுசரித்தும் பிராந்திய அரசியலை இராஜதந்திர மதிநுட்பத்துடனும் கையாள வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கிறது. ஏற்கனவே சீனாவையும் இந்தியாவையும் கையாள்வதில் அநுரகுமார அரசு தடுமாறிவருவதால் அதில் கவனம் செலுத்தத் தவறினால் வேறு தாக்கங்கள் ஏற்படலாமென்பதை நாம் கூறித்தான் தெரியவேண்டுமென்பதில்லை.

இறுதிப்போருக்கு பின்னரான தமிழர் அரசியல் சீரழிந்து சின்னாபின்னமாகிப் போயுள்ள நிலையில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறந்துள்ளது . புதிய அரசியலமைப்புப் பற்றி பேசப்படும் இக்காலத்தில் , அவற்றைப்பற்றிப் பேசக்கூடிய மகத்தான ஆளுமைகளை பாராளுமன்றுக்கு அனுப்பாமல் சிறந்ததொரு அரசியல் தீர்வுக்கான அடித்தளமாக புதிய அரசியலமைப்பு அமையவேண்டுமென தமிழர் கனவு காணும் துயர நிலை இருப்பதையும் இங்கு கோடி காட்ட விரும்புகிறோம். எப்படியிருப்பினும் 2025ஆம் ஆண்டாவது விடிவைத் தரும் ஆண்டாக அமையட்டும் என்று பிரார்த்திப்பதைத் தவிர, நம்பிக்கை கொள்வதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை.

# மலையக அடையாள அரசியலின் தனி நாயகன் பெ.சந்திரசேகரன்



மு. நித்தியானந்தன் - லண்டன்

இருநூறு ஆண்டுகால மலையக சமூக, அரசியல் சீரான, ஒரு கற்றலியல், கருத்தியல் வளர்ச்சியைக் கொண்டதல்ல. அது பல்வேறு முரண் கூறுகளைக் கொண்ட கதம்பக்கோலம்; பன்னிற மணிக் கலவை. மனித ஜீவிகளாகவே கருதப்படாத கொடிய, இருண்ட வெளிகளை அவர்கள் கடந்து வந்துள்ளனர். ஆங்கிலத் துரைத்தனத்தின் காட்டுத் தர்பாக்களில், சுதந்திர இலங்கையின் ரௌடி அரசியலில் மலையக மக்கள் சமூகம் திணறிப்போயிருக்கிறது. கொடூர இன ஒடுக்குமுறை அவர்களின் நாளாந்த வாழ்வில் நடைமுறையாகி விட்டிருந்தது. அவர்களின் தொழிற் சங்கங்கள் பெரும் போராட்டத் தளங்களாக செயற்பட்டன. இன அரசியலும் போராட்ட அரசியலும் அம்மக்களின் போராட்டப் பாதையில் மூர்க்கமான தடங்களைப் பதித்தே வந்துள்ளன.

இந்திய அரசியல் தலைவர்கள், விட்ட குறை தொட்ட குறையாக இருந்த இந்திய உறவு, கொழும்பில் வர்த்தகத் தலைமை, லங்கா சமசமாஜக் கட்சியின் போராட்டம், தி.மு.க. அரசியல் ஆதர்ஸம், நாடற்றவர்களாக்கப்பட்ட கோரம், இந்திய - இலங்கை அரசுகளின் பேச்சு வார்த்தைகள், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், மாஓ சிந்தனைகள், சாதி அரசியல், மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலையக இளைஞர் முன்னணி, மலையக மக்கள் இயக்கம், மக்கள் முன்னணி என்று மலையக சமூக அரசியலின் இந்தக் குறியீடுகள் மலையக சமூகத்தின் பன்முகத் தன்மையைச் சுட்டிக்காட்டுவனவாகும்.





பொதுவான அபிலாஷைகள், நிறைவேறாத உரிமைகள் என்ற பசளையில் மலையகத்தின் அடையாள அரசியல் ஆழ வேரூன்றியுள்ளது. மலையக மக்களின் வாழ்நிலைமை உட்சிக்கல் மிகுந்த ஓயாது மாறிக்கொண்டிருக்கும் சிந்தனைப்போக்கைப் பிரதிபலித்தது; இரு வேறு வேறான நிலைப்பாடுகளில் தோய்ந்து கொண்டிருந்தது. சரித்திரத்தின் நிர்ப்பந்தத்துக்கு முகம் கொடுத்தது; தொடர்ச்சியான போராட்டங்களை எதிர்கொண்டது; இணக்க அரசியலைக் கைக்கொண்டது; பின், வீசி உடைத்தது. புதிய புதிய அமைப்புகளைக் கண்டது; பின், அவை மறைந்தன. அரவணைத்துச் செல்ல முயன்றிருக்கிறது; எதிர்த்து மூர்க்கம் கொண்டிருக்கிறது. சோர்ந்து, குமைந்து, விரக்தியில் முக்குளித்திருக்கிறது. தனது சொந்த இருப்பை தனது மண்ணை ஸ்திரப்படுத்த முனைந்திருக்கிறது. கூட்டுப் போராட்டத்தின் களமாக இருந்திருக்கிறது. தொழிற் போராட்டங்களில் உயிரைத் துச்சமாக மதித்து, இரத்தம் சிந்தியிருக்கிறது. நிகழ்வுகளை இறுகப் பற்றியிருக்கிறது. அதே வேளை, அவற்றைக் கைநழுவ விட்டிருக்கிறது. நினைவைக் கூர்மைப்படுத்திக்கொண்டிருக்கிறது; பல வேளை நினைவிலிருந்தே அழித்துவிட்டிருக்கிறது. அணைத்திருக்கிறது, விலக்கியிருக்கிறது.

வெவ்வேறு சரித்திர கட்டங்களில் நிகழ்வுகளின் மோதலில் தனது நிலைப்பாட்டை எடுத்துக்கொள்ளப் போராடியுள்ளது.

பொருளாய நலன்களை விடவும் அரசியல் முனைப்பை விடவும் கலாசார அரசியலில் தன் முகத்தைப் பார்த்திருக்கிறது. தமக்கேயுரித்தான சமூக உறவுகள், வேர்கள், பொது வழக்காறுகள் தம்மைத் தனித்துவ இனமாக வரிப்பதை உணர்கிறது.

இத்தாலிய மார்க்ஸிய அறிஞர் கிராம்ஸி கூறினார்.

'இன்று நிலைமை எப்படிக் காணப்படுகிறதோ

அதை நோக்கி வன்மையாக உன் முகத்தைத் திருப்பு'

அவ்வாறு யதார்த்தத்தின் புரிதலில், நடப்பியலின் அனுபவத்தில் மக்களின் நாடித் துடிப்பைப் பிடித்துப் பார்த்து, தன் போராட்டப் பாதையைத் தொடக்கிய போராளி தான் அமரர் பெ. சந்திரசேகரன்.

வெற்றுக் கோஷங்கள், மாரீச இலக்குகள், புனித உச்சாடனங்கள், கற்பனார்த்த விடிவுகள் என்பனவற்றுக்கப்பால் சிக்கல்பிக்கலான மலையக சமூகத்தின் அடையாள அரசியலின் தனித்துவத்தைப் புரிந்துகொண்ட அரசியல் ஆசான் ஆவார்.

மாஓ சிந்தனைகள் மலையகத்தில் ஓர்மம் கொண்டிருந்த காலப்பகுதியில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அவர் சிக்கெனப் பற்றியிருந்தவர். வர்க்கப் போராட்டச் சிந்தனையும் அரசு இயந்திரத்தை நிர்மூலமாக்கும் புரட்சிப் போக்கும் மலையக சமுதாயத்தின் அரசியல் தெறிப்பில் கோலம் காட்டவே செய்கின்றன. கலாசார அரசியலின் அடையாள அரசியலின் சூட்சுமத்தை சந்திரசேகரன் உள்வாங்கியிருக்கிறார்.

The Making of the English Working Class என்ற புகழ்மிக்க நூலில், ஈ.பி. தொம்ஸன் வர்க்க அரசியலை விட, கலாசார அரசியலே மையமான இடத்தை வகிக்கிறது என்று நிறுவுகிறார். அத்தொழிலாளர்கள் மத்தியில் துளிர்த்த பிரக்ஞை நிலைக்கு சர்வ வியாபகத் தன்மை எதுவும் கிடையாது என்று அவர் தெளிவுபடுத்துகிறார்.

தலவாக்கலையில் சிங்களக் காடையர்களை எதிர்க்கும் போர்க் குணத்தை, தொண்டமானை எதிர்த்துக் களம் நின்ற துணிச்சலை, பின் பிந்துனுவெவ படுகொலைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய வீரத்தை, நீண்ட சிறை வாசத்திலும் துவண்டு போகாத மன வலிமையை, பதவி வந்தபோது பணிவுகாட்டப் பழகிய பெரும் பண்பை அமைச்சர் சந்திரசேகரன் தன் அரசியல் வாழ்வில் வெளிப்படுத்தியுள்ளார்.

மலையக மண்ணின் அசல் மைந்தனாக, அவர்களின் உரிமை வேட்கையை ஆத்மார்த்தமாக உணர்ந்த பெருமகனாக அவர் செயற்பட்டிருக்கிறார். மலையகத்தின் பிரதிநிதியாக புலம்பெயர் சமூகத்தில் அவர் பெரிதும் மதிக்கப்பட்டார்.

ஓர் அமைச்சரின் தோரணையை அவரிடம் நான் ஒருபோதும் கண்டதில்லை. லண்டனுக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் பெரும்பாலான சமயங்களில் அவர் என்னை வந்து சந்தித்திருக்கிறார். அவரது அரசியல் பிரவேசம், அவரை இராணுவம் கைது செய்த விபரம், அவரது சிறை அனுபவங்கள், அரசியல் மோதல்கள், விடுதலைப் புலிகளுடனான தொடர்புகள், சமாதானத் தீர்வுக்காக அவர் மேற்கொண்ட பேருழைப்பு பற்றியெல்லாம் மணிக்கணக்கில் என்னிடம் பேசியிருக்கிறார். துல்லியமான நினைவாற்றலுடன் தனது அரசியல் பயணத்தை அவர் என்னிடம் விபரித்திருக்கிறார்.

அவரது வசீகரமான பழகும் பாங்கு மிக மதிக்கத்தக்கது. எவரும் எளிதில் அணுகத்தக்கவராக அவர் திகழ்ந்தார். தன்னை எதிர்த்தோரையும் பழி கூறியோரையும் விகற்பமின்றி அணைத்துக் கொள்ளும் பெரு மனது அவருடையது.

மலையகத்தின் அறிவுஜீவிகளை அங்கீகரித்து, அவர்களின் ஆலோசனைகளை மனந்திறந்து கேட்க, அமைச்சர் சந்திரசேகரம் என்றும் தயங்கியதில்லை. மலையக சமுதாயத்தின் விடிவில் அறிவுஜீவிகள், இளைஞர்கள், வர்த்தகர்கள், அரசுப் பணியாளர்கள் என்று சகல மக்களும் தத்தம் பங்கை வழங்க வேண்டுமென்பதில் நிறைந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அரச பணிகளில் படித்த மலையக இளைஞர்கள் உயரிய இடங்களில் அமர வேண்டுமென்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார்.

மலையக மக்கள் ஏனைய இனத்தவர்களைப் போல சகல உரிமைகளுடனும் தன்மானத்துடனும் வாழவேண்டுமென்பது அவரது அரசியல் இலட்சியமாகியிருந்தது.

இ.தொ.காவிலிருந்த காலத்திலும் தன் நெஞ்சுக்கு நீதி என்ற பட்டத்தை எடுத்துரைக்க அவர் பின் நின்றது கிடையாது.

"அரசியல் என்பது சாத்தியப்பாடுகளின் கலை தான்" - என்பது அமரர் சந்திரசேகரத்தின் கணிப்பாக இருந்தது. நடைமுறைகளின் வரம்புக்குள் பேசியும் இணங்கியும் போராடியும் அனுசரித்தும் செயற்பட வேண்டிய முள்வெளிப் பாதையில் தான் மலையக சமூகம் பயணித்தாக வேண்டுமென்று அவர் கருதியிருந்தார்.

மலையகம் பல்வேறு கருத்தியல்களின், பல தரப்பினரின் அபிலாஷைகளது மோதல் களமாகவே திகழ்ந்திருக்கிறது.

இன்றைய சமகால அரசியலில் இந்தப் பன்முகப் போக்கை, மலையக அரசியல், சமூக கலாசார வெளியில் உருவாகி வரும் மாறுபட்ட சிந்தனைப் போக்குகளை, மாறிச் செல்லும் தடங்களை நுட்பமாக அறிந்து வைத்திருந்த ஓர் அரசியல் போராளியின் மறைவு மலையகத்தின் எழுச்சிமிகு வரலாற்றுச் செல்நெறியில் கசிந்துபோய்விட்ட கருநிழலாக துயரத் தோற்றம் தருகிறது.

## இன்றைய நாளில்...

- 1772 – 90 ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தக்கூடியதான உலகின் முதலாவது பயணிகள் காசோலை லண்டனில் விற்பனைக்கு வந்தது.
- 1788 – தி டைம்ஸ் முதல் இதழ் லண்டனில் வெளியிடப்பட்டது.
- 1866 – யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக காவல்துறை அமைக்கப்பட்டது.
- 1872 – இலங்கையில் ரூபா, மற்றும் சதம் ஆகிய நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 1883 – இலங்கையின் தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன.
- 1912 – சீனக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1958 – இலங்கையில் வாகன இலக்கத்தகடுகளில் சிங்கள மொழியில் (ஸ்ரீ எழுத்து கட்டாயமாக்கப்பட்டது.
- 1979 – சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே தூதரக உறவு நடைமுறைக்கு வந்தது.
- 1985 – பிரித்தானியாவில் முதன் முதலில் கைபேசி தொடர்பை வோடபோன் நிறுவனம் ஏற்படுத்தியது.
- 1993 – செக்கோசிலவாக்கியா நாடு செக் குடியரசு, சிலோவாக் குடியரசு என இரு நாடுகளாகப் பிளவடைந்தது.
- 1999 – 11 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் யூரோ நாணயம் அறிமுகமானது.
- 2008 – கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

## நக்கல் நமசிவாயம்

புதுவருடத்துக்குள்ள தீர்வு கிடைக்கும் என்று சொல்லக்கூடிய சம்பந்தன் ஐயாவும் இல்ல.. தீர்வும் இல்ல என்னங்கோ...



# பூண்டுலோயாவில் தந்தையின் தாக்குதலுக்கு இலக்காகி மகன் பலி



நீலமேகம் பிரசாந்த்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டன்சினன் கீழ்ப்பிரிவு தோட்டத்தில் தந்தையின் தாக்குதலுக்கு இலக்காகி 25 வயது மகன் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரான 45 வயது தந்தையும் 16 வயது நபரும் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மகன் நவின்குமாருக்கும் தந்தைக்குமிடையில் ஏற்பட்ட கருத்து மோதல் கைகலப்பாக மாறியதில் தந்தையின் தாக்குதலால் சம்பவமிடத்திலேயே நவின்குமார் உயிரிழந்துள்ளார்.

சடலம் நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் விசாரணையின் பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துசெல்லப்பட்டதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

### மாத்தளை வலயக் கல்விக் காரியாலயத்தில்

# இடநெருக்கடியால் பணிகளை சரிவரச் செய்யமுடியாத நிலை

## பணிப்பாளர் நயோமி ஹெட்டியாரச்சி தெரிவிப்பு

எம் .எஸ் .எம் .மஸாஹிம்

மாத்தளை வலயக் கல்விக் காரியாலயத்தில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக தங்களது பணிகளை முன்னெடுக்க முடியாத இக்கட்டான நிலையில் இருப்பதாக மாத்தளை வலயக்கல்விப் பணிப்பாளர் நயோமி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

மாத்தளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவரும் பிரதியமைச்சருமான கமகெதர திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது. அதன்போதே வலயக்கல்விப் பணிப்பாளர் நயோமி ஹெட்டியாரச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாத்தளை பிரதேச செயலாளர் சேனதீர உட்பட அரச அதிகாரிகள் கலந்துகொண்ட மேற்படி கூட்டத்தில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த வலயக்கல்விப் பணிப்பாளர்,

“தற்பொழுது எமது வலயக்கல்விப் பணிமனை அமைந்துள்ள இடம் மாத்தளை விஜயா தேசிய கல்லூரிக்குச் சொந்தமானது. சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் இப்பணிமனை இவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக அறிகிறோம். ஆரம்ப காலத்தில் இவ்வலயத்தில் குறைந்தளவான பாடசாலைகளும் சிறுதொகை ஆசிரியர்களும் சொற்ப மாணவர்களும் இருந்துள்ளனர். இந்நிலைமை தற்போது மாறியுள்ளது. அதாவது இந்நிலை நான்கு, ஐந்து மடங்குகளாக உயர்ந்து விட்டது.

தற்போது இவ்வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சுமார் ஐம்பதாயிரம் மாணவர்கள் கல்வி பயில்வதோடு 3,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கல்விப் பணியாற்றுகின்றார்கள்.

எமது வலயக் காரியாலயத்தில் சுமார் 200க்கு மேற்பட்டவர்கள் பணிபுரிவதோடு சுமார் 4,000க்கும் மேற்பட்ட ஆவணங்களும் களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. இந்த 4000 ஆவணங்களையும் பாதுகாப்பாக வைப்பதற்குப் பிரமாண்டமான களஞ்சியமொன்று தேவைப்படுகின்றது. தற்போதைய களஞ்சியசாலை பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகிறது. இங்கு பணிபுரிகின்ற சேவையாளர்களும் தினசரி தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இப்பணிமனைக்கு வரும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சரிவர தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே இக்கட்டிடம் எந்த வகையிலும் போதாதென்பதை இச்சபையில் பிரதியமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

மேலும், மாத்தளை வலயக் கல்வி அலுவலகம் தேசிய மட்டத்தில் 15ஆவது இடத்தில் உள்ளது. நவீன யுகத்துக்கேற்றவாறு மாணவர்களின் கல்வி வசதிகளையும் அவற்றை முன்னெடுத்துச் செல்லும் ஆசிரியர்களினதும் தேவைகளை முறையாக நிறைவேற்ற மாத்தளை நகரில் மாத்தளை வலயக் கல்விப் பணிமனைக்கென சிறந்த காணியொன்றை பெற்றுத் தரும்படி பிரதியமைச்சர் கமகே திஸாநாயக்கவிடம் வேண்டிக்கொள்கின்றேன்- என்றார்.

இதற்குப் பதிளித்த பிரதியமைச்சர் கமகே திஸாநாயக்க,இது சம்பந்தமாக மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரட்ன மற்றும் பிரதேச செயலாளர் சேனாதீர ஆகியோரிடம் கலந்தாலோசித்து பொருத்தமான இடமொன்றைப் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார்.

# வெல்லவாய நகரில் விசேட டெங்கு கட்டுப்பாட்டுத் திட்டம்

## பல வீடுகளுக்கெதிராக வழக்குகள் பதிவு



எம்.ஏ.எம்.ஹசனார்

அதிகரித்துவரும் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த வெல்லவாய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிணங்க வெல்லவாய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வீடுகள், கடைகள் உள்ளிட்ட அனைத்து தனியார் அரச பாணிகள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்பட்டு வருவதுடன் டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்தவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவும் செய்யப்பட்டுள்ளது.வெல்லவாய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், வெல்லவாய பொலிஸ் நிலையம், பிரதேச சபை, பிரதேச செயலகம் மற்றும் வெல்லவாய பிரதேசத்திலுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு டெங்கு நோய் தொடர்பான பல தெளிவூட்டும் நிகழ்ச்சிகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# மலைநாட்டு தேசிய பால் சபைக்கு என்ன நடந்தது?



மஸ்கெலியா நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன், மஸ்கெலியா, நோர்வூட், பொகவந்தலாவ மற்றும் நல்லதண்ணி பகுதிகளில் இயங்கி வந்த தேசிய பால் சபைக்கு என்ன நடந்தது?

கடந்த 2006ஆம் ஆண்டு காலப் பகுதியில் அப்போதைய அரசாங்கம் மலையக மக்கள் நலன் கருதி நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு நகரங்களில் தேசிய பால் சபைக்கு உரித்தான பால் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையங்களை அரச காணிகளில் திறந்து வைத்தன.

அவ்வாறு அமைக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் அப்பகுதியிலுள்ள அனைத்து மக்களும் தங்களுக்குத் தேவையான பால் உற்பத்திப் பொருட்களையும் பெற்றுக்கொண்டனர்.

அக்காலத்தில் முன்னாள் மறைந்த அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இப்பகுதியிலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அக்காலத்தில் மறைந்த முன்னாள் அமைச்சர் கால்நடை அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகித்தார். அப்போதே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எது எப்படியோ, கடந்த சில ஆண்டுகளாக இந்த விற்பனை நிலையங்கள் அனைத்தும் தனியார் கையில் சிக்கிவிட்டன.

அவ்வாறு சிக்கிய விற்பனை நிலையங்களில் தேசிய பால் பண்ணையில் உற்பத்திசெய்யும் எந்தவொரு பொருளையும் காணவில்லை. மாறாக, ஏனைய பொருட்கள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையங்களாக அவை மாறியுள்ளன.

அரச சொத்துகளை தனியார் கையகப்படுத்தி நாளாந்த வாடகைக்கு விட்டுள்ளனர். அதாவது நாளாந்தம் ஆயிரம் ரூபா முதல் இரண்டு ஆயிரம் ரூபா வரை வாடகைக்கு விட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கால்நடை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சர் முன்வந்து இந்த நிலையத்தைப் பொறுப்பேற்று மக்கள் நலன் கருதி மீண்டும் தேசிய பால் பண்ணையில் உற்பத்திசெய்யும் அனைத்துப் பொருட்களையும் விற்பனைசெய்ய ஆவன செய்யவேண்டுமென்று இப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# புது வருட வாழ்த்துச் செய்திகள்

## வாழ்வில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாகத் திகழவேண்டும்

### பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



(பொகவந்தலாவ நிருபர்)

வாழ்வில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாக பிறக்கின்ற புத்தாண்டு திகழ வேண்டுமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார். அவரது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலர்ந்த புது வருடம், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் ஆரோக்கி யமும் நிறைந்த செழிப்பான ஆண்டாகவும் மனிதநேயம் முதன்மை பெற்று "வளமான நாடு, அழகான வாழ்க்கை" அனைவருக்கும் கை கூடவும் வாழ்வில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாகத் திகழவும் எனது உளமார்ந்த புது வருட நல்வாழ்த்து களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

## 2025ஆம் ஆண்டு நம்பிக்கை நிறைந்த ஆண்டாகத் திகழட்டும்

### இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் எம்.பி.



பிறக்கின்ற ஒவ்வொரு புத்தாண்டும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரவேண்டுமென்ற எதிர்பார்ப்பு ஒவ்வொரு வருக்குள்ளும் உண்டு. மலையக சமூகத்தின் மாற்றத்துக்காகவும் ஏற்றத்துக்காகவும் தம்மை அர்ப்பணித்திருக்கும் இ.தொ.கா. எத்தனை சவால்களை எதிர்கொண்டாலும் இடைவிடாது மக்களுக்காக பாடுபடும் - என இ.தொ.கா. பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது மலையக மக்கள் இடர்களை எதிர்கொள்ளும்போதும் சவால்களைச் சந்திக்கின்றபோதும் அரணாகப் பாதுகாத்து நின்று துயர்களைத் துடைத்து வந்திருக்கின்றோம். வரலாற்றுப் பணியை நாம் மேற்கொண்டிருப்பதை வரலாறு சான்றுபடுத்தும். இதன் காரணமாகவே, தெளிந்த சிந்தனையோடும் கொள்கைப்பற்றோடும் மக்கள் எம் பின்னால் அணிவகுத்து நிற்கின்றனர்.

இன்று எம் மக்கள் அனைவருக்கும் சலுகைகள், உரிமைகள், வசதி வாய்ப்புகள் என்பன இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் சாணக்கியத்தாலும் தொழிற்சங்கப் போராட்டங்களாலும் பெறப்பட்டவை என்பதை எவரும் மறந்துவிட முடியாது. 2025ஆம் ஆண்டு நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாகவும் மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழிகாட்டும் ஆண்டாகவும் திகழவேண்டும். இம்மக்களின் தேவைகளிலும் அவர்களது முயற்சிகளிலும் நாம் கைகொடுப்போம். புதிய ஆண்டில் மலையகமெங்கும் மகிழ்ச்சி பரவட்டும்.

இதேவேளை, இன்றைய இளைஞர்கள், நாளைய தலைவர்கள். இவர்களின் எதிர்பார்ப்புகள், விருப்பங்கள், வாஞ்சைகள் இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். இந்த ஆண்டு இளைஞர்களின் ஆண்டு. புதிய சகாப்தத்தைப் படைக்கப்போகும் இவ்வரசாங்கம் இளைஞர்களின் எண்ணங்களை நிறைவேற்றி நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாக இந்த ஆண்டை நாம் எதிர்பார்க்கின்றோம்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் இப்புத்தாண்டு சிறப்புடன் மலர்ந்து, ஒளிமயமான எதிர்காலம் அமைய எனது வாழ்த்துகள்.

## மாயைகளை உணர்த்தும் ஆண்டாக புத்தாண்டு மலரட்டும்

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா



மாறுதல்கள் எதனையும் இதுவரை தந்துவிடாத மாற்றத்துடன் கடந்திடும் 2024ஆம் ஆண்டுக்கு விடை கொடுத்து, மாயைகளை உடைத்து யதார்த்தங்களை அடையாளம் காட்டும் ஆண்டாக அமைய புத்தாண்டை வரவேற்போம் - என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் புத்தாண்டு செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"கொரோனா பெரும் தொற்றும் பொருளாதார நெருக்கடியும் ஏற்படுத்திய சுமைகளை சுமந்துகொண்டிருந்த மக்கள் மத்தியில் மாற்றம் பற்றிய பேச்சுகள் தீயாய் பற்றிக்கொண்ட ஆண்டாக 2024 அமைந்திருந்தது.

வாக்குகளை வாரி அள்ளிக்கொள்ள இனவாதம் இனிமேலும் வசதியான ஆயுதமல்ல என்பதை உணர்ந்துகொண்டவர்கள், மாற்றம் என்ற வார்த்தைக்கு மகுடம் சூட்டினார்கள்.

கழுத்தை நெரிக்கும் சுமைகளிலிருந்து மீள்வதற்கான "ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துதான் பார்ப்போமே" என்ற பரிசோதனை முயற்சிக்கு எமது மக்களும் முன்வந்தமையால் சில மாற்றங்களை 2024 எம்மத்தியில் பிரசவி த்திருந்தது.

ஆனால், எமது மக்களை சித்திரவதை செய்யும் பிரச்சினைகளை எதிர்கொள் வதற்கு சரியான வழிமுறை என்று நாம் அடையாளப் படுத்தியவையும் முன்னெடுத் தவையுமே யதார்த்தமான அணுகுமுறைகள் என்பதை தொடரும் சம்பவங்கள் அடுத்தடுத்து அம்பலப் படுத்தி வருகின்றன.

எனவே, பிறந்திருக்கும் புதிய ஆண்டு, எம்மக்களை சூழ்ந்திருக்கும் மாயைகளை முழுமையாக உடைத்து, சரியானவர்களையும் சரியானவற்றையும் அடையாளம் காட்டும் என்ற நம்பிக்கையுடன், அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய நம்பிக்கையுடன் மலர்கின்ற புத்தாண்டு இன்பம் நிறையும் இனிய வருடமாக மாறும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. வாழ்த்து



(எஸ்.கணேசன்)

புதிய நம்பிக்கையுடன் மலர்கின்ற இந்தப் புத்தாண்டில் மக்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன் - என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அலர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையக மக்களின் நலன் கருதி புதிய அரசாங்கத்துடன், புதிய பாதையில் அனைவரும் ஓரணியில் பயணிப்போம்.

மக்கள் அனைவருக்கும் இந்தப் புத்தாண்டு புதிய நம்பிக்கையையும் எழுச்சியையும் மலர்ச்சியையும் வளர்ச்சியையும் வழங்கும் ஆண்டாக மலரட்டும். அத்தோடு, மலையக மக்களின் எண்ணங்கள் யாவும் வண்ணங்களாய் மாறி இன்பம் நிறையும் இனிய வருடமாக மாறும்.

மலரும் புத்தாண்டு நீங்காத வளங்களையும் நிறைவான மகிழ்ச்சி மற்றும் மன உறுதியைத் தரும் ஆண்டாக அமைந்திட மனமார்ந்த வாழ்த்துகள்.

## அனைவருக்கும் முன்னேற்றம் தரும் ஆண்டாகத் திகழட்டும்

### வட மாகாண ஆளுநர் வேதநாயகன்



(பு.கஜிந்தன்)

புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில், அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு வடக்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவரட்டும் என வட மாகாண ஆளுநர் வேதநாயகன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, புத்தாண்டு என்பது தனியே கொண்டாட்டத்துக்கான நேரம் மட்டுமல்ல. எங்கள் சிந்தனைகளை புதுப்பித்தலுக்கான தருணமும் கூட. மகிழ்வுடன் வரவேற்கும் புதிய ஆண்டில் முறைமை மாற்றத்தை நாம், எம்மில் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆரம்பிக்கவேண்டும் என்று விரும்புகின்றேன்.

எங்கள் நிர்வாகத்தின் முதுகெலும்பாக, மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும் - அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சேவைகளை வழங்குவதிலும் அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பும் தொழில்முறையும் மிக முக்கியமானவை. நேர்மை, செயற்றிறன் மற்றும் பொறுப்புணர்வோடு உங்கள் விலைமதிப்பற்ற சேவைப் பங்களிப்பு களைத் தொடரவேண்டும் என அன்புரிமையுடன் கோருகின்றேன்.

பொதுச் சேவையில் மிக உயர்ந்த தரங்களை நிலைநிறுத்த நாங்கள் ஒன்றாக பாடுபடுவோம். எங்கள் மக்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைப்போம்.

புதிய ஆண்டிலிருந்து எங்கள் பொதுச்சேவையை அன்பானதும் விரைவானதும் தரமானதுமாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதிபூண்டு முறைமை மாற்றத்தை ஆரம்பிப்போம்.

இந்த ஆண்டை எமது மாகாணத்துக்கு, ஒரு குறிப்பிடத்தக்க இலக்கை அடைவதற்கான ஆண்டாக மாற்ற, அரசியல் தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் - அரச பணியாளர்கள் - மக்கள் என நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பயணிப்போம்.

## நாட்டு மக்களுக்கு சம உரிமையை வழங்கி சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும்

### இ.தொ.காவின் தவிசாளர் இராமேஸ்வரன்



(தலவாக்கலை நிருபர்)

பிறக்கும் புத்தாண்டு இலங்கை மக்களுக்கு சம உரிமையையும் சம அந்தஸ்தையும் வழங்கி நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும் - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி இராமேஸ்வரன் விடுத்துள்ள புது வருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றுக்கு விடிவு தேடி புதிய வாழ்வின் ஏக்கங்களைக் கண்களில் சுமந்து இலங்கை வந்து குடியேறிய இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் உழைப்பை மட்டுமே மூலதனமாகக்கொண்டு வாழ்வின் இருள் நீக்கி ஒளிபெற்ற ஒரு பெரும் சமுதாயமாக, வரலாற்று மாற்றத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்நாட்டின் சகல முன்னேற்றத்துக்கும் இந்திய வம்சாவளி மக்கள் தமது பங்களிப்பை பெருமளவிலே செலுத்தியிருக்கின்றார்கள். உழைக்கும் வர்க்கமாகிய தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருந்து வருகின்றார்கள்.

எந்தவொரு காலகட்டத்திலும் இந்நாட்டுக்கு உழைப்பாளிகளாக இருந்திருக்கின்றார்களே தவிர, இந்த நாட்டுக்கு எந்தவிதமான பாதகத்தையும் ஏற்படுத்தியதில்லை. இவர்கள் இதுவரையிலும் அனைத்து உரிமைகளையும் பேரம்பேசும் சக்திகளால்தான் பெற்றிருக்கின்றார்கள்.

எனவே, இந்தப் புதிய வருடத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கும் அதேபோல மக்கள் வாழ்க்கையில் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனைவரும் நிறைவேற்றுவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம்.

நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலைநிறுத்தி நாம் தலைநிமிர்ந்து ஏனையோருக்கு நிகராக வீறுநடைபோட பிறக்கும் புத்தாண்டில் உறுதிகொள்வோம் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







புத்தாண்டை முன்னிட்டு பால் பொங்குவதற்காக பானைகளை மக்கள் கொள்வனவு செய்ததைப் படங்களில் காணலாம்.

(படங்கள் – வெனுர சந்திரமாலித)

## நாட்டை முன்னேற்ற புத்தாண்டில் அனைவரும் கரம் கோர்ப்போம்

### புதுவருட வாழ்த்துச் செய்தியில் சுப்ரமணியம் சசிகுமார்



பிறக்கின்ற 2025ஆம் ஆண்டை ஆங்கில வருடமாக நாம் கருதுகின்றோம். இந்த வருட பிறப்பானது சகல மக்களுக்கும் இனம், மதம் மொழி பாராது ஒரு சுபிட்சமான ஆங்கில வருடமாக இருக்குமென நான் எண்ணுகின்றேன் - என ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் சுப்ரமணியம் சசிகுமார் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் எமது மக்கள் பட்ட துன்ப துயரங்கள் அனைத்தும் நீங்கி ஒரு சந்தோஷமான-சுபிட்சமான ஆங்கில வருடமாக மாற நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நான் மட்டுமல்ல, நாம் ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்யும்போது நிச்சயமாக இந்த மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. எனவே எமது கோபதாபங்கள், அயல்வீட்டாரின் கோபங்கள், நாட்டிலுள்ள கோபங்கள், அரசியல்வாதிகளின் கோபங்கள் என பல வகையான கோபங்கள் இருக்கின்றன. இவை அனைத்தையும் நமது இதயத்திலிருந்து நீக்கி நாம் அனைவரும் இலங்கையர்கள், நம் நாட்டை நேசிக்கின்றவர்கள். முன்னேற்றமடைந்த வேறு நாடுகளைபோல நம் நாடும் முன்னேற நாம் ஒவ்வொருவரும் கைகோர்த்து உதவ வேண்டும்.

அப்படி உதவினால்தான் வாழ்வாதாரம், கல்வி, பொருளாதாரம், குழந்தைகளின் வாழ்க்கை மேம்படும். ஆகவே, இனம், மதம், மொழி பாராது அனைவரும் கைகோர்த்து நமது நாட்டை நேசித்து முன்னேற்ற கரம் கோர்ப்போம்.

## புத்தாண்டு பிறக்கட்டும்...

*நாடு நலம் பெற நம்*
*வீடு வாசல் துலங்க*
*பாடுபடும் பாட்டாளி மக்கள்*
*பஞ்சம் பசி பிணியின்றி*
*பாங்கோடு வாழ நல்ல*
*வருமானங் கை கூடி*
*வசதியோடு நாம்*
*வாழத் தக்கதாய்*
*புத்தாண்டு பிறக்கட்டும்!*

*இனியேனும் உணவுப்*
*பொருட்களுக்கு*
*விலைகள்*
*கூட்டிக் குறைத்தும்*
*குறைத்துக் கூட்டியும்*
*மக்களை சிக்கலில்*
*சிக்க வையாமல்*
*தெளிவான விலைகளில்*
*மலிவான பொருட்கள்*

*ஒரு நிலையான*
*விலைகளில்*
*நாடெங்கும் நமக்கு*
*கிடைப்பதாய்*
*புத்தாண்டு*
*பிறக்கட்டும்!*

**பாண்டியூர் பொன். ஏ.பீ.என்.நவநீதன்**

## புத்தாண்டு பிறந்தது!



*புத்தாண்டு*
*பிறந்த தின்று*
*புதுமையெல்லாம்*
*பொலிகவென்று*

*இத்தரையில்*
*மாந்தரெல்லாம்*
*இன்பமுடன்*
*வாழ்கவென்று!*

*வளமையெங்கும்*
*நிறைகவென்று*
*வறுமையது*
*மறைகவென்று*

*விளைவு எங்கும்*
*பெருகவென்று*
*விடிந்த தின்று*
*புத்தாண்டு!*
*முன்னேற்றப்*
*பாதையிலே*
*முனைந்து நின்றால்*
*ஏற்றமுண்டு*
*எந்நாளும்*
*துன்பமில்லை*
*என்றியம்ப*
*வந்த தின்று*

*தீண்டாமை*
*ஒழிக வென்று*
*தீ தெல்லாம்*
*நலிகவென்று*
*வேண்டுவென*
*கிடைக்க வென்று*
*விடிந்த தின்று*
*புத்தாண்டு!*

*கவிச்சுடர்*
*-கல்லொளுவை பாரிஸ்-*

# புத்தாண்டு பிறந்த கதை

உலகம் முழுவதும் பெரும்பான்மையான மக்களால் கொண்டாடப்படுவது ஆங்கிலப் புத்தாண்டு. இந்த நாளை மத, இன, மொழி வேறுபாடில்லாமல் மக்கள் சிறப்பாக வரவேற்று மகிழ்கின்றனர்.

உலகத்திலேயே நியூஸிலாந்தின் சமோவா பகுதியில்தான் முதன்முதலில் ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கிறது. இலங்கை நேரப்படி, டிசம்பர் 31ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு அங்கு புத்தாண்டு பிறந்துவிடுகிறது. அடுத்தபடியாக, அவுஸ்திரேலியாவில் மாலை 6.30 மணியளவில் ஆங்கிலப் புத்தாண்டு கொண்டாடப்படுகிறது.

பட்டாசுகளை வெடித்தும் வானவேடிக்கைகளை நிகழ்த்தியும் மக்கள் புத்தாண்டை வரவேற்கின்றனர். இனிப்புகளைப் பரிமாறியும் பூக்களை வழங்கியும் புத்தாண்டு தருணங்கள் நினைவில் இருத்தப்படுகின்றன.

உலகம் முழுக்க நேர வித்தியாசத்தால் புத்தாண்டு வெவ்வேறு நேரத்தில் பிறப்பதைப்போல ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு பாரம்பரிய பழக்கங்கள் இந்தப் புத்தாண்டு ஜனவரி 01ஆம் திகதியன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இது பொதுவாக எல்லா நாட்டிலும் கடைப்பிடிக்கப்படும் ஒன்றுதான். நள்ளிரவில் வானவேடிக்கைகளை நிகழ்த்தி ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்து சொல்வது வழக்கம்.

உலகெங்கும் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 01ஆம் திகதி ஆங்கிலப் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. இதற்குப் பின்னால் ஒரு சுவாரஸ்ய வரலாறு இருக்கிறது.

## வரலாறு

இங்கிலாந்தை ஆண்ட மன்னர்கள் இயேசு கிறிஸ்து பிறந்த டிசம்பர் 25ஆம் திகதியை புத்தாண்டாகக் கொண்டாட வேண்டுமென்று கூறினர். மேலும் டிசம்பர் 25ஆம் திகதியையே புத்தாண்டாகப் பின்பற்றினர். இப்படியாக, 1500ஆம் ஆண்டுவரை ஆண்டின் முதல் திகதியில் பல குழப்பங்கள் நிலவின. கி.பி. 1582ஆம் ஆண்டு, பாப்பரசர் 13ஆம் கிரிகோரி, ஜூலியன் கலண்டரை இரத்துச்செய்தார். நான்காண்டுகளுக்கு ஒரு முறை லீப் ஆண்டு என்று கூறி, அந்த ஆண்டின் பெப்ரவரி மாதத்துக்கு 29 நாட்கள் என்று 365 நாட்களையும் 12 மாதங்களுக்குள் மிகச் சரியாக அடக்கினார். இதனையடுத்து உலகம் முழுவதும் கிரிகோரியன் கலண்டர் முறை நடைமுறைக்கு வந்தது. கிரிகோரியன் கலண்டர் முறைப்படி, ஆண்டின் முதல் நாள் ஜனவரி 01 நிர்ணயிக்கப்பட்டது. அதுமுதல் ஜனவரி 01ஆம் திகதி புத்தாண்டு தினமாக உலக மக்களால் கொண்டாப்பட்டு வருகிறது.

## ஜூலியன் கலண்டர்

புகழ்பெற்ற மன்னரான ஜூலியஸ் சீசர், ஜூலியன் கலண்டரை உருவாக்கினார். அதில் தான் ஜனவரி 01 ஆங்கிலப் புத்தாண்டாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அது உலகம் முழுவதும் பெரும்பாலானோர் பின்பற்றும் கிரிகோரியன் கலண்டரை ஒத்திருந்தது.




கடவுள் ஜனஸைக் கௌரவிக்கும் விதமாக ரோமானியர்கள் அம்மாதத்தின் முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாட ஆரம்பித்தனர். புத்தாடை உடுத்தி மகிழ்ந்தனர். பரிசுகளைப் பரிமாறிக்கொண்டனர்.

எனினும், இயேசுகிறிஸ்து பிறந்த டிசம்பர் 25ஆம் திகதியையே (கிறிஸ்மஸ்) புத்தாண்டாகக் கொண்டாட வேண்டுமென இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. அந்நாட்டு மக்கள் டிசம்பர் 25ஆம் திகதியைக் கொண்டாடத் தொடங்கினர்.

## கிரிகோரியன் கலண்டர்

குழப்பம் நீடித்த நிலையில் கடைசியாக கி.பி. 1500களில் பாப்பரசர் கிரிகோரி என்பவர், லீப் ஆண்டை உருவாக்கி புதிய கலண்டரை உருவாக்கினார். இதைத்தொடர்ந்து கிரிகோரியன் கலண்டர் நடைமுறைக்கு வந்தது. இதைத்தான் இன்று நாம் பின்பற்றி புத்தாண்டைக் கொண்டாடி வருகிறோம்.

## மொசபத்தேமியர்களின் புத்தாண்டு

ஜனவரி மாதம் 01ஆம் திகதியை புத்தாண்டின் முதல் நாளாகப் பின்பற்றி வருவது சுமார் 500 வருடங்களாகத்தான். 2000 ஆண்டுகளுக்கு முன் மொசபத்தேமியர்கள், மார்ச் 25ஆம் திகதியைத்தான் ஆண்டின் முதல் நாளாகக் கருதி வந்தார்கள். அவர்கள் வாழ்ந்து வந்த காலத்தில், ஒரு ஆண்டுக்கு 10 மாதங்கள் மட்டும் தான் இருந்தது. மார்ச் மாதம் ஆண்டின் முதல் மாதமாகவும் மார்ச் 25ஆம் திகதி ஆண்டின் முதல் திகதியாகவும் இருந்தது. இயேசுவின் தாய் மேரிமாதா கர்ப்பமுற்ற திகதி என்பதால் இந்த நாளை புத்தாண்டு தினமாகக் கொண்டாடினர்.

## ரோமானியர்களின் புத்தாண்டு

ரோமானியர்களின் கலண்டரில் சூரியனின் நகர்வுத்தன்மையை அடிப்படையாகக்கொண்டு மார்ச் மாதம் 01ஆம் திகதியை புத்தாண்டு தினமாக கொண்டாடத் தொடங்கினார்கள். ரோமானிய மன்னர்களில் ஒருவரான நுமா போம்பிலியஸ் என்பவர் 10 மாதமாக இருந்த ஆண்டில் கூடுதலாக இரண்டு மாதங்களைச் சேர்த்து ஒரு ஆண்டுக்கு 12 மாதங்கள் என்றாக்கினார். முதல் இரண்டு மாதங்களுக்கு ஜனவரி, பெப்ரவரி என்று பெயர்கள் வைத்தனர். ரோமானியர்களின் கடவுளான ஜனஸ் நினைவாகத்தான் ஜனவரி என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. அந்த முறைதான் இப்போதும் பின்பற்றப்படுகிறது.

## உலகம் முழுவதும் ஜனவரி 01ஆம் திகதி புத்தாண்டு நேரங்கள்

ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம் என்பது உலகம் முழுவதும் தழுவிய கொண்டாட்டமாகும். பொதுவாக, பூமிப்பந்தின் ஒரு முனையில் பகலாக இருக்கும்போது, இன்னொரு முனையில் இரவாக இருக்கும். அதை வைத்துத்தான் புத்தாண்டு பிறந்துவிட்டதாகக் கணக்கிடப்படுகிறது. அந்த வகையில், புத்தாண்டை முதலில் கொண்டாடும் நாடு, கடைசியாக வரவேற்கும் நாடு எவை என்பதைப் பார்ப்போம்.

பசுபிக் தீவு நாடுகளான டோங்கா சமோவா, கிரிபாட்டி நாடுகளில் முதன்முதலாக புத்தாண்டு பிறக்கிறது. அதாவது, இலங்கை நேரப்படி 31ஆம் திகதி பிற்பகல் 3.30 மணி என்றால், இவர்களுக்கு சரியாக அதிகாலை 12 மணியாகிவிடும். புத்தாண்டையும் வரவேற்கத் தயாராகிவிடுவார்கள். உலகிலேயே முதல் முதலாக புத்தாண்டு இவர்களுக்குப் பிறப்பதால், எப்போதுமே சற்று ஆடம்பரமாகவே கொண்டாடுவார்கள். லேசர் விளக்குள் ஒளிர, வானவேடிக்கைகளுடன் கொண்டாட்டம் களைகட்டும். இலங்கை நேரப்படி 31ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நியூஸிலாந்து புத்தாண்டு கொண்டாட்டம் ஆரம்பமாகும்.

அடுத்ததாக, இங்கிலாந்து நாட்டில் புத்தாண்டு கொண்டாடப்படும். இலங்கை நேரப்படி மாலை 5.30 என்றால், இங்கிலாந்திலோ புத்தாண்டுக்கு நேரம் நெருங்கிவிடும். அதேபோல, ஜனவரி 01ஆம் திகதி காலை 09 மணிமுதல் பிற்பகல் 01 மணிவரை கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் தொடங்கும். இதில், மாலை 5.30 மணிக்கு புத்தாண்டு பிறக்கும் கடைசி நாடாக இருப்பது பேக்கர் தீவாகும். இதுதான் புத்தாண்டு பிறக்கும் கடைசி தீவு நாடாகும். ஆக, ஒருநாள் முன்னதாக மாலை நேரத்தில் தொடங்கும் புத்தாண்டை, மறுநாள் மாலை வரை ஒவ்வொரு உலக நாடுகளும் கொண்டாடி மகிழ்கிறது.

## இலங்கை நேரப்படி புத்தாண்டைக் கொண்டாடும் நாடுகள்

டிசம்பர் 31: பிற்பகல் - 3.30 கிரிபாட்டி, மாலை 4.30 நியூஸிலாந்து, மாலை 5.30 பிஜி, ரஷ்யாவின் சிறிய பகுதி மாலை 6.30, அவுஸ்திரேலியாவின் பெரும்பகுதி இரவு 8.30, ஜப்பான் - தென் கொரியா இரவு 9.30, சீனா - மலேசியா - சிங்கப்பூர் - ஹொங்கொங் - பிலிப்பைன்ஸ் இரவு 10.30, தாய்லாந்து - வியட்நாம் - கம்போடியா ஆகிய நாடுகளில் புத்தாண்டு பிறக்கும்.

ஜனவரி 01: அதிகாலை 1.30 ஓமான் - அஜர்பைஜான், காலை 3.30 கிரீஸ் - தென்னாபிரிக்கா - சைப்ரஸ் - எகிப்து - நமீபியா, காலை 4.30 ஜேர்மனி - பிரான்ஸ் - இத்தாலி - சுவிட்ஸர்லாந்து - நெதர்லாந்து - மொராக்கோ - கொங்கோ - மால்டா, காலை 5.30 மணி இங்கிலாந்து - அயர்லாந்து - போர்த்துக்கல், காலை 8.30 பிரேஸில் - ஆர்ஜென்ரீனா - சிலி, காலை 9.30 மணி புவேர்ட்டோ ரிக்கோ - பெர்முடா - வெனிசுலா - அமெரிக்க வேர்ஜின் தீவுகள் - பிரித்தானிய வேர்ஜின் தீவுகள், காலை 10.30 அமெரிக்க கிழக்கு கடற்கரை (நியூயோர்க், வொஷிங்டன், முதலியன), பெரு, கியூபா, பஹாமாஸ் காலை 11.30, மெக்சிகோ, கனடாவின் சில பகுதிகள் மற்றும் யு.எஸ். பிற்பகல் 1.30, அமெரிக்க மேற்கு கடற்கரை (லொஸ் ஏஞ்சல்ஸ், சான் பிரான்சிஸ்கோ முதலியன). பிற்பகல் 3.30 ஹவாய் - பிரெஞ்சு பாலினேசியா. மாலை 4.30 சமோவாவில் புத்தாண்டு பிறக்கும்.

## புத்தாண்டு சபதம்

இது இன்றோ, நேற்றோ தொடங்கியதில்லை. புத்தாண்டு சபதம் மேற்கொள்வது ஆதிகாலத்தில் இருந்தே வழக்கமாக இருந்திருக்கிறது. பாபிலோனியர்கள் புத்தாண்டில் பழைய கடன்களை அடைப்போம் என்றும் கடன் வாங்கிய பொருட்களைத் திருப்பித் தருவோம் என்றும் உறுதிபூண்டனர்.

நாமும் எத்தனையோ சபதங்களை ஏற்றிருப்போம். சில நாட்கள் முயற்சித்து கைவிட்டும் இருப்போம். இந்தப் புத்தாண்டில் இருந்தாவது எடுத்த சபதத்தை நிறைவேற்றுவோம். முடியவில்லையா? எந்த சபதமும் செய்ய மாட்டேன் என்றாவது சபதம் எடுப்போம்.

**தொகுப்பு: எஸ்.நிசாந்தி**












# வீட்டுவேலை தொழிலாளர்களின் சம்பள பட்டியல் மட்டக்களப்பில் வெளியீடு

## 08 மணி நேர வேலைக்கு 2000 ரூபா நிர்ணயம்







**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் வீட்டுவேலை தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் நாளொன்றுக்கு 08 மணித்தியாலத்துக்கு 2000 ரூபாவாக நிர்ணயித்து அது தொடர்பான சம்பளப் பட்டியலொன்றை வீட்டுவேலை தொழிலாளர் சங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை (31) வெளியிட்டு வைத்தது.

மட்டக்களப்பு டயஸ் லேனிலுள்ள வீட்டுவேலை தொழிலாளர் சங்கக் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சம்பளப் பட்டியலை சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் வெளியிட்டுவைத்து இவ்வாறு தெரிவித்தனர்.

மாவட்டத்தில் 450க்கும் மேற்பட்ட வீட்டுவேலை தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்களாக இருந்துவருகின்றனர். இந்நிலையில், இந்த வீட்டுவேலை தொழிலாளர்களுக்கு தொழில் வழங்குபவர்கள் ஒரு நாளைக்கு அனைத்து வேலைகளையும் வாங்கிக்கொண்டு அவர்களின் உழைப்புக்கேற்ற சம்பளங்களை வழங்காது சாப்பாட்டுப் பார்சலையும் குறைந்த ஊதியத்தையும் வழங்கி அவர்களை அவமதித்து நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு வீட்டுவேலை தொழிலாளிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களின் உழைப்புக்கேற்ற சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சம்பளப் பட்டியலொன்றை நிர்ணயித்துள்ளோம். அதற்கமைய 08 மணிநேர வேலைக்கு 2,000 ரூபாவும் 04 மணித்தியால வேலைக்கு 1,500 ரூபாவும் ஒருமணிநேர வேலைக்கு 500 ரூபாவும் 08 மணித்தியாலத்துக்கு மேல் வேலை செய்தால் ஒரு மணித்தியாலத்துக்கு 250 ரூபாவும் தங்கி வேலை செய்வோருக்கு மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவும் தொழில் வழங்குபவர்களால் வழங்கப்படவேண்டுமென சம்பளப் பட்டியலொன்றை நிர்ணயித்து அதனை துண்டுப்பிரசுரம் மூலமாக பொது இடங்களில் விநியோகிக்கவுள்ளோம்.

எனவே, எமது சங்கம் கண்டியை தலைமையகமாகக்கொண்டு பல மாவட்டங்களில் இயங்கி வருகின்றது. இந்தச் சங்கத்திலுள்ள வீட்டுவேலை தொழிலாளர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். எனவே, இந்தச் சங்கத்தில் இணையாத வீட்டுவேலை தொழிலாளர்கள் இணைந்து கொள்ள முடியும் - என அவர் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சம்பளப் பட்டியல் துண்டுப்பிரசுரத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளரிடம் கையளித்து வெளியிட்டுவைத்த பின்னர் துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களிடம் விநியோகித்தனர்.

# சுற்றுச்சூழலுக்கு உகந்த வடிவமைப்புகளை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு



**(பெரியநீலாவணை செய்தியாளர்)**

டயகோணியா மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயல் முன்னணி அனுசரணையில் U CAN திட்டத்தினூடாக சமூக அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது நண்பர்கள் வட்டம் சமூக சேவை அமைப்பின் ஒத்துழைப்புடன் விழுமியக் கல்வி ஊடாக, புத்தாக்க சமூக தீர்வுகளை வழங்கும் தொனிப்பொருளில் கடற்கரையை சுத்தப்படுத்துதல் மற்றும் கழிவுகளைக்கொண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த வடிவமைப்புகளை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (29) சாய்ந்தமருதில் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் செயற்பாடுகளில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் ஈடுபாட்டை அதிகரித்து, புத்தாக்க செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பைப் பெறும் நோக்கில், இளைஞர்கள் மத்தியில் நற்செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை ஸாஹிரா கல்லூரி தேசியப் பாடசாலையின் சுற்றாடல் கழக அங்கத்தவர்கள், சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவத் தலைவர்கள், சாய்ந்தமருது நண்பர்கள் வட்ட சமூகசேவை அமைப்பின் அங்கத்தவர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா, சுங்கத் திணைக்களப் பிரதி பணிப்பாளர் ஆதம்பாவா ஜலீல், விவசாய திணைக்கள விவசாயப் போதனாசிரியர் அப்ஸல் றிப்கி ஆகியோர் நிகழ்வில் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

இதன்போது, சுற்றாடலில் காணப்படும் கழிவு பிளாஸ்ரிக் போத்தல்களைக் கொண்டு சுற்றுச்சூழல் வடிவமைப்பு, இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள பிளாஸ்ரிடிக் வகைகளும் அவற்றினால் ஏற்படும் சூழல் மாசடைவுகளும் வீட்டுக்கழிவுகளைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியாக பயனடைதல் ஆகிய தலைப்புகளில் வளவாளர்களால் விளக்கமளிக்கப்பட்டன.

# அரசியல் ரீதியாக எவரும் பழிவாங்கப்படவில்லை

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா



**(சீனக்குடா செய்தியாளர்)**

அரசியல் ரீதியாக எவரும் பழிவாங்கப்படவில்லை. ஊழலோடு சம்பந்தப்பட்ட, அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் தொடர்பாகவே முழுமையாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்திக்கொண்டு எவரும் தப்பிக்க முடியாத வகையிலேயே கைதுகள் இடம்பெறுவதாக வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்ட பின்னர் பிரதி அமைச்சர் ஊடகவியலாளர்களையும் சந்தித்தார். இதன்போது, தற்போது நாட்டில் அடிக்கடி கைதுகள் இடம்பெறுவதாக ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கைது செய்தாலும், ஏன் கைதுசெய்கிறீர்கள் எனவும் கைது செய்யாவிட்டாலும் ஏன் கைது செய்யவில்லை எனவும் ஊடகவியலாளர்களே கேட்கின்றனர்.

2015 நல்லாட்சிக் காலத்தில் அவசரமாக தொடரப்பட்ட வழக்குகள் காரணமாக சிலர் தப்பித்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் காணப்பட்டது. எமது ஆட்சியில், அவ்வாறில்லாமல், குற்றவாளிகளுக்கு சரியான விசாரணைகளும் உரிய தண்டனைகளும் வழங்கப்படும். இதில் பாகுபாடுகள் எதுவும் காட்டப்படமாட்டாது. இதனடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேக மெய்ப்பாதுகாவலர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

சொத்துக்குவிப்பு, கறுப்புப் பணம் தொடர்பாக இவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். பண்டிகைக் காலங்களில், அனைத்து அமைச்சர்களும் நாட்டிலிருந்து பணியாற்றுகின்ற முதலாவது சந்தர்ப்பம் இப்போதுதான் ஏற்பட்டிருக்கின்றது. இதுகுறித்து நாட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவிப்பதை ஊடகங்கள் வாயிலாக கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது. தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கடந்த அரசாங்க காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளுக்கு நிரந்தரத் தீர்வு எட்டிய பின்னரே, இந்த நாட்டை சாதாரண நிலைக்குக் கொண்டுவர முடியும் - என்றார்.





**2025 புதுவருடத்தை முன்னிட்டு மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி நகரில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் நேற்று (31) கொட்டும் மழைக்கு மத்தியிலும் மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிந்தது. வர்த்தக நிலையங்களிலும் ஏனைய வியாபார ஸ்தலங்களிலும் வியாபாரம் களைகட்டிய நிலையில் மக்கள் புத்தாடைகளையும் ஏனைய வீட்டுப்பாவனைப் பொருட்களையும் கொள்வனவு செய்ததைக் காண முடிந்தது. (குருக்கள்மடம் செய்தியாளர்)**



**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹீர் கடந்த வெள்ளிக்கிழமை நற்பிட்டிமுனைக்கு விஜயம் செய்து வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்ததோடு, மக்கள் குறைகளையும் கேட்டறிந்துகொண்டார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனை இளைஞர் அமைப்பாளரும் சட்டத்தரணியுமான சீ.எம்.ஹலீம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை தன்னால் முடிந்தளவு தீர்த்து வைப்பதாகவும் உறுதியளித்தார். இதன்போது மக்கள், தமது பிரதேச தேவைகள் குறித்த மகஜர்களையும் கையளித்தனர். இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சீ.எம்.முபீத், பள்ளிவாசல் தலைவர் மௌலவி முஹம்மத் றிசான் உட்பட இன்னும் பலரும் இணைந்துகொண்டனர். (நற்பிட்டிமுனை செய்தியாளர்)**

# வாகரை கடலோரத்தில் கரையொதுங்கியுள்ள மியன்மார் மிதப்பு







**(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)**

மட்டக்களப்பு, வாகரை பிரதேச பால்சேனை கடலோரத்தில் படகு என நம்பப்படும் பாரிய மிதப்பொன்று நேற்றுக் காலை (31) கரையொதுங்கியுள்ளது.

மூங்கில்களால் கட்டப்பட்ட இந்தப் படகில் மியன்மார் என ஆங்கிலத்தில் காணப்படுவதோடு அந்நாட்டு தேசிய கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளதால் அந்நாட்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என பிரதேசவாசிகள் நம்புகின்றனர்.

படகில் சமையல் பாத்திரங்களும் சில உணவுப்பொருட்களும் காணப்படுவதோடு விறகு அடுப்பில் சமைத்த அடையாளங்களும் காணப்படுகின்றன.

தகவல் அறிந்த வாகரை பொலிஸார் மற்றும் கடற்படை அதிகாரிகள் படகை பார்வையிட்டதோடு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கௌரவிப்பு



**(எருவில் செய்தியாளர்)**

கல்முனை மாநகர சபையில் பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கல்முனை மெதடிஸ்த சேகர இறைமக்கள் தேவாலயத்தில் கடந்த திங்கட்கிழமை(30) பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது புத்தாண்டை முன்னிட்டு 90 பேருக்கு தலா 05ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

கல்முனை மெதடிஸ்த சேகர முகாமை குரு ரவி முருகுப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் பிரதம அதிதியாகவும் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.அமலதாஸ் சிறப்பு அதிதியாகவும் இலங்கை மெதடிஸ்த திருச் சபையின் முன்னாள் உப தலைவரும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் முன்னாள் அதிபருமான வடிவேல் பிரபாகரன் அழைப்பு அதிதியாகவும் கலந்துகொண்டு இத்தொழிலாளர்களின் அர்ப்பணிப்பான சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

# அனல் மின் நிலையம் அமைக்க பெறப்பட்ட காணிகளை வழங்குக!

## சம்பூர் மக்கள் கோரிக்கை



**(பதுர்தீன் சிஹானா)**

2013ஆம் ஆண்டில் அனல் மின் நிலையம் அமைப்பதற்காக 2,795 ஏக்கர் விவசாய நிலங்களை அரசாங்கம் கைப்பற்றியது. இந்தக் காணிகளை மீண்டும் மக்களுக்கு வழங்க வேண்டுமென சம்பூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் நகரத்திலிருந்து 6.4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சம்பூர் கிராமம், 2006ஆம் ஆண்டு யுத்த நிலைமை காரணமாக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு சொத்துகளை இழந்து அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

2013ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட பின்னர், மக்கள் விவசாயம் மற்றும் கடல்நீர் மீன்பிடி தொழில்களை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கிராமத்தில் வாழும் 950 குடும்பங்களின் விவசாய நிலங்களுக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

2013ஆம் ஆண்டில் அனல் மின்நிலையம் அமைப்பதற்காக 2,795 ஏக்கர் விவசாய நிலங்களை மின்சார சபை கைப்பற்றியது. அத்துடன், 2016ஆம் ஆண்டில் மேல் நீதிமன்றம் அனல் மின்நிலைய திட்டத்தை நிராகரித்த பின்னரும் சம்பூர் மக்களுடைய நிலங்கள் மக்களுக்குத் திருப்பி வழங்கப்படவில்லை. இந்நிலையில், குறித்த பகுதியில் கடற்படைத்தளம் அமைக்கப்பட்டதால், மக்கள் சோளம், கச்சான், உழுந்து, பயறு மற்றும் வெங்காயம் போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வந்த 180 ஏக்கர் நிலங்களை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது. ஆகவே, இந்த நிலங்கள் மீள மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் சம்பூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



**பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய அரச முகாமைத்துவ சேவையின் 1ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பாடநெறிப் பயிற்சி பழைய மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ்கள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனால் நேற்று செவ்வாய்க்கிழமை (31) வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், நிர்வாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (கல்லடி செய்தியாளர்)**



**பிரான்ஸ் இலங்கை முஸ்லிம் அமைப்பின் அனுசரணையில் அபாபீல் உதவும் கரங்கள் அமைப்பால் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவும் நோக்கில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அமைப்பின் தலைவர் எம்.சி.எம்.அமீன் தலைமையில் காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் ஏ.ருபாய்தீன், ஆசிரியர்கள், அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (மட்டக்களப்பு)**

# கண்டியில் சான்றோர் கௌரவிப்பு




















மலையக கலை, கலாசார (இரத்தின தீபம்) சங்கம் நடத்திய மறைந்த சான்றோர்களை நினைவுகூரும் நிகழ்வு கண்டி கெப்பட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூர், சர்வதேச திரைப்பட, சின்னத்திரை மேடை நாடக நடிகரான ரிஷாட் வீரக்கொடி, சிறப்பு விருந்தினராக சிங்களத் திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான பத்மசிறி கொடிக்கார, பேராசிரியர் துரை.மனோகரன், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் முத்து சம்பந்தர், மலையக கலை, கலாசார சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவர் தேசாபிமாணி லயன் கேசவமூர்த்தி, ஊடகவியலாளர்களான ஜே.எம். ஹாபீஸ், இக்பால் அலி, டீ. வசந்தகுமார், கே.எம். ரசூல், கண்டி இரா.அ.இராமன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது சான்றோர்கள் கௌரவிப்பும் கலை நிகழ்சிகளும் இடம்பெற்றன. மேலும் பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.


**(படங்களும் - தகவலும் கண்டி இரா.அ.இராமன்)**

Amritha
மனம் மகிழட்டும் நறுமணத்தால்
தமிழன் உடன்
திருப்பதி புனித யாத்திரை
Amritha வின் திருப்பதி புனித யாத்திரைக்கான அதிர்ஷ்டசாலிகளாக நீங்களும் மாறலாம். இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது 'தமிழன்' பத்திரிகையில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பிரசுரமாகும் Amritha திருப்பதி புனித யாத்திரை தொடர்பாக கூப்பனை வெட்டியெடுத்து அதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை பூர்த்தி செய்து Amritha ஊதுபத்தி பெட்டியை அதனுடன் இணைத்து
Amritha வின் திருப்பதி புனித யாத்திரை ,
'தமிழன்' ஆசிரியர் பீடம், இல: 91,
லிபர்ட்டி பப்ளிஷேர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ,
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு -07
என்ற முகவரிக்கு எதிர்வரும் 2025-02-28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
கூப்பன் இலக்கம் 24
பெயர்: ------------------------------------
முகவரி : ------------------------------------
தொலைபேசி இலக்கம்: ------------------------------------




# கடல் நடுவே கண்ணாடி இழை நடை பாலம்





கன்னியாகுமரியில் கடல் நடுவேயுள்ள பாறை அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தையும் மற்றொரு பாறையில் அமைந்துள்ள 133 அடி உயர திருவள்ளுவர் சிலையையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை நடை பாலம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் நேற்று (31) திறந்துவைக்கப்பட்டது. திருவள்ளுவர் சிலை நிறுவி இன்றுடன் (01) 25 ஆண்டுகள் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 2025 மலர்ந்தது புத்தாண்டு





மலர்ந்துள்ள 2025 ஆங்கிலப் புத்தாண்டை உலக நாடுகள் வான வேடிக்கைகளுடன் வண்ணமயமாக வரவேற்றுள்ளன.

இந்நிலையில், மலர்ந்துள்ள 2025ஆம் ஆண்டை உலகின் முதலாவது நாடாக வரவேற்றுள்ளது பசுபிக் தீவிலுள்ள கிரிபட்டி. இதன்படி நேற்று (31) முதலாவதாக கிரிபட்டியில் (Kiribati) பிறந்தது.

மலர்ந்துள்ள 2025 ஆங்கிலப் புத்தாண்டை கிரிபட்டி மக்கள் வண்ணமயமான வான வேடிக்கைகளுடன் வரவேற்றுள்ளனர்.

அதைத் தொடர்ந்து, டோங்கா, சமோவா, நியூசிலாந்திலும் ஆங்கிலப் புத்தாண்டு பிறந்தது. மக்கள் உற்சாகத்துடன் பட்டாசு வெடித்து, கேக் வெட்டி ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்து புத்தாண்டை வரவேற்றனர்.

நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரிலுள்ள ஸ்கை டவரில் நள்ளிரவில் பட்டாசுகள் வெடித்து புதுவருட பிறப்பை மக்கள் வரவேற்றனர்.

சமூக வலைத்தளங்களிலும் புத்தாண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்து இந்தாண்டு நல்லாண்டாக அமையுமென நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அதனைத்தொடர்ந்து, அவுஸ்திரேலியா புதுவருட பிறப்பை வரவேற்றது. அந்நாட்டின் சிட்னி, மெல்பேர்ன் உள்ளிட்ட நகரங்கள் புதுவருடக் கொண்டாட்டங்கள் களைகட்டின.

தொடர்ந்து, ஜப்பான் மற்றும் தென்கொரியா உள்ளிட்ட நாடுகளும் அவற்றுடன் சீனா மற்றும் பிலிப்பைன்ஸும் அடுத்தடுத்த சில மணிநேரங்களில் 2025ஆம் ஆண்டை வரவேற்றன. தொடர்ந்து உலக நாடுகள் அனைத்தும் மலர்ந்துள்ள 2025 ஆங்கிலப் புத்தாண்டை வண்ணமயமான வாணவேடிக்கைகளுடன் வரவேற்றன.

இந்நிலையில், உலகம் முழுவதும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஆடித் திளைத்து சற்று ஓய்வெடுத்துக் கொண்டிக்கும் இன்றுதான் (01) பாக்கர் தீவு மற்றும் ஹவ்லேண்ட் தீவுகளில் புத்தாண்டு பிறக்கவுள்ளது.

ஹவாய் தீவுகளின் தென்மேற்குப் பகுதியில் இந்தத் தீவுகள் அமைந்துள்ளன. இங்குதான் கடைசியாக புத்தாண்டுக் கொண்டாட்டங்களும் வாழ்த்துகளும் கடைசியாகக் கேட்டு முடியும். இத் தீவுப் பகுதிகளில் இன்று (01) பிற்பகல் 3.30 மணியளவில் புத்தாண்டு பிறக்கவுள்ளது.

# உக்ரைன் போருக்கு மத்தியில் புத்தாண்டு வாழ்த்து பகிர்ந்துகொண்ட புட்டின் - கிம்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்த வடகொரியா ஜனாதிபதி, இரு நாட்டு இராணுவத்தை வலுப்படுத்த அழைப்பு விடுத்துள்ளார்.

வடகொரிய தலைவர் கிம் ஜோங்-உன் நேற்றுமுன்தினம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எழுதிய கடிதத்தில்,

''ரஷ்யாவுடனான கூட்டாண்மையை வலுப்படுத்தும் வகையில் இரு நாட்டின் உறவுகள் மேலும் பலமடையும். ரஷ்ய இராணுவம் உட்பட அனைத்து ரஷ்யர்களுக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருதரப்பு உறவுகளை மேலும் அதிகரிப்பது மட்டுமன்றி, புதிய திட்டங்களுடன் புதிய உயரத்தை அடையவேண்டும். ரஷ்ய இராணுவமும் ரஷ்ய மக்களும் நீவ்-நாஜிசத்தை தோற்கடிக்க வேண்டும். அதற்கான வெற்றியை 21ஆம் நூற்றாண்டின் இந்தப் புத்தாண்டு அமைய வேண்டும்'' - என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் நடந்த உச்சிமாநாட்டில் கிம் – புட்டின் இடையிலான பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளுக்கும் ஏதேனும் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் மூன்றாம் தரப்பினர் ஆயுதத் தாக்குதல் நடத்தினால் இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது. உக்ரைனுக்கு எதிரான போரில், ரஷ்யாவுக்கு ஆதரவளிக்க வட கொரியா பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்களை ரஷ்யாவுக்கு அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

# தென்கொரிய ஜனாதிபதி யூனுக்கு பிடியாணை

## நீதிமன்ற உத்தரவால் பரபரப்பு



தென்கொரிய ஜனாதிபதியை கைதுசெய்வதற்கான பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால் அந்நாட்டு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் கடந்த 03ஆம் திகதி இரவு அந்நாட்டில் திடீரென அவசரநிலை இராணுவச் சட்டத்தை அறிவித்தார். இந்தத் திடீர் அறிவிப்பை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்ததால், இந்த அவசரநிலை இராணுவச் சட்டம் திரும்பப் பெறப்பட்டது. அவசர சட்டம் அமுல்படுத்தியதற்காக ஜனாதிபதி யூன் பதவி விலக வேண்டுமென்று அந்நாட்டு மக்கள் கோரிக்கை விடுத்து போராட்டங்கள் நடத்தினர்.

அந்நாட்டு பாராளுமன்றத்திலும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதனால் யூன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து, கடந்த 14ஆம் திகதி அந்நாட்டின் இடைக்கால ஜனதிபதியாக பிரதமர் ஹான் டக்-சூ நியமிக்கப்பட்டார். இந்நிலையில், திடீர் அவசரநிலை பிரகடனத்தில் ஹான் டக்-சூவுக்கும் முக்கிய பங்கிருப்பதாகத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தன. இந்தத் தீர்மானம் இடைக்கால ஜனாதிபதிக்கு எதிராக அமைந்ததால் அவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

தற்போது, தென் கொரியாவின் இடைக்கால ஜனாதிபதியாக துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான சோய் சாங்-மோக் நியமிக்கப்பட்டுள்ளார். தென் கொரியா பாராளுமன்றத்தில் அடுத்தடுத்து நடக்கும் நிகழ்வுகளால் அந்நாட்டு அரசியலில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே தென்கொரிய ஊழல் தடுப்பு நிறுவனம் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைதுசெய்யக் கோரி நீதிமன்றத்தில் பிடியாணை விண்ணப்பித்திருந்தது. தற்போது நீதிமன்றம் யூன் சுக் இயோலை கைதுசெய்ய பிடியாணை பிறப்பித்துள்ளது. அதனால் அடுத்த ஓரிரு நாட்களில் அவர் கைதுசெய்யப்படுவாரென்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யேமன் மீது அமெரிக்கா - பிரித்தானியா வான் தாக்குதல்

யேமன் மீது அமெரிக்கா மற்றும் பிரித்தானிய ஆகிய நாடுகள் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளன.

இஸ்ரேல், காஸாவில் செயற்பட்டுவரும் ஹமாஸ் ஆயுதக்குழு இடையே ஓராண்டுக்கு மேலாக போர் நடைபெற்று வருகிறது. காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 45,541இற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,08,338இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்தப் போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு யேமனில் செயற்பட்டுவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.


மேலும், ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஆதரவு என்ற பெயரில் செங்கடல் பகுதியில் செல்லும் சரக்குக் கப்பல்களைக் குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அவ்வப்போது ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் பதிலடி தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், யேமனின் அல்-ஹுடெடா மாகாணம் அட்-துஹயாதா மாவட்டம் அல்-பசா பகுதியில் நேற்றுமுன்தினம் அமெரிக்கா, பிரித்தானிய ஆகிய நாடுகளின் விமானப்படை விமானங்கள் வான்வழித் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. கடந்த வாரம் யேமனில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2025 - புத்தாண்டை முன்னிட்டு உக்ரைன் - ரஷ்யா இடையே கைதிகள் பரிமாற்றம்



உலகம் முழுவதும் மலர்ந்துள்ள 2025 ஆங்கிலப் புத்தாண்டு களைகட்டியுள்ள நிலையில், புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ரஷ்யா – உக்ரைன் இடையே ஏற்பட்ட உடன்பாடு காரணமாக இரு நாடுகளும் 300 போர்க் கைதிகளை விடுதலை செய்துள்ளன.




ரஷ்யா – உக்ரைன் இடையிலான போர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்றுவரும் நிலையில், இரு நாடுகளும் நூற்றுக்கணக்கான மக்களை போர்க் கைதிகளாக அடைத்து வைத்துள்ளன. போர்க் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையே உடன்பாடு எட்டப்படாத நிலையில், மூன்றாம் தரப்பு நாடுகள் தலையிட்டு இப்பிரச்சினைகளுக்கு யோசனைகளை வழங்கி வருகின்றன.

அந்த வகையில் 2025 ஆங்கிலப் புத்தாண்டு பிறந்துள்ள நிலையில், போர்க் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இரு நாட்டு அரசுகளிடையே ஐக்கிய அரபு இராச்சியம் பேச்சுவார்த்தை நடத்தியது. அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் (30) 300இற்கும் மேற்பட்ட போர்க் கைதிகளை இரு நாடுகளின் அதிகாரிகளும் பரிமாற்றம் செய்துகொண்டனர். இதுதொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில், எங்களது தரப்பிலிருந்து 150 உக்ரைன் போர்க் கைதிகளை விடுவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் தரப்பில் 189 கைதிகள் வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையிலுள்ள முரண்பாடுகள் குறித்து தகவல்கள் ஏதுமில்லை. இது தொடர்பாக உக்ரைன் ஜனாதிபதி வெளியிட்ட பதிவில், ''போர்க் கைதிகளை விடுவித்தல் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த உதவிய ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளார். மேலும், விடுவிக்கப்பட்ட உக்ரைன் போர்க் கைதிகளை பஸ்களில் அழைத்துவரும் புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார்.

# எத்தியோப்பிய லொறி விபத்தில் 71 பேர் பலி



எத்தியோப்பியாவில் லொறியொன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 71 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

தெற்கு எத்தியோப்பியாவின் சிடாமா பகுதியில் திருமண நிகழ்வுக்காக லொறியொன்றில் 70இற்கும் மேற்பட்டோர் சென்றுகொண்டிருந்தபோது அங்கிருந்த ஆற்றுப்பாலத்தைக் கடந்த நிலையில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி எதிர்பாராதவிதமாக ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 64 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், சிலர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலர் உயிரிழந்த நிலையில், பலி எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது.

மோசமான வீதியும் விபத்துக்குக் காரணமாக சொல்லப்படுகிறது. இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலமாக மாற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துக

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்



இலங்கையை சுற்றுலாப் பயணிகள் கவரக்கூடிய இடமாக மாற்றுவதற்குத் தேவையான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

'Clean Sri Lanka'(கிளீன் ஸ்ரீலங்கா) திட்டத்தை மீளமைப்பதனூடாக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் வலுவடையுமென ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசியாவின் மிகவும் பெறுமதிமிக்க மற்றும் பசுமையான தீவாக இலங்கையை நிலைநிறுத்துவது பற்றியும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

சுற்றாடல் மற்றும் கலாசாரத் துறைகள் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது குறித்தும் இந்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதில் முறையான மற்றும் முறைசாரா துறைகளில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைப்பது குறித்தும் கவனஞ்செலுத்தப்பட்டது.

புத்தசாசன, மத அலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி, சுற்றாடல் அமைச்சர் வைத்தியர் தம்மிக்க படபெந்தி, சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் தலைவர் புத்திக ஹேவாவசம், வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டி.எம்.ஜே.நிலான் குரே உள்ளிட்ட அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

# ரூ.10 மில்லியன் பெறுமதியான சிகரெட் - மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது



ரூபா 10 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட் மற்றும் மதுபானப் போத்தல்களை சட்டவிரோதமாகக் கொண்டு வந்த 45 வயது வர்த்தகரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று (31) கைதுசெய்யப் பட்டார்.

சந்தேகநபர் கொழும்பு - 14, பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன் வர்த்தக நோக்கத்துக்காக அடிக்கடி வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபடுபவரெனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தியாவின் பெங்களூரில் இருந்து இண்டிகோ எயார்லைன்ஸ் விமானத்தில் (6E-1164) நேற்று (31) அதிகாலை 3.50 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சந்தேகநபர் ஐந்து பயணப் பைகளுக்குள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளை மறைத்து வைத்திருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.மேலும், அதே பயணப் பொதியில் 125 மதுபான போத்தல்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இலங்கையின் பல்வேறு மாகாணங்களிலுள்ள மதுபானக் கடைகள் மற்றும் உணவகங்களில் இவை விற்பனை செய்யப்படவிருந்தவை எனவும் தெரியவந்துள்ளது. சட்டவிரோதமான முறையில் பொருட்களை இறக்குமதி செய்ததாக வர்த்தகர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் அவர் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உறவினர்களுக்கிடையிலான கைகலப்பில் சமரசமேற்படுத்தச் சென்றவர் மீது கத்திக்குத்து

## ஒருவர் பலி – சந்தேகநபர் கைது





*ரஸீன் ரஸ்மின்*

மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடையாமோட்டை, கிலவமடுச்சேனை பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் (30) கூரிய ஆயுதத்தினால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மைத்துனர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியதுடன், அதனை சமரசத்துக்கு கொண்டுவர முயற்சி செய்த உறவினரான மாமாவே மருமகனின் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிழந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மதுரங்குளி-கிலவமடுச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த தொம்பகஹ பத்திரனகே டைட்டஸ் ரோஹன் பீரிஸ் (வயது 56) எனும் நான்கு பிள்ளைகளின் தந்தையே இச்சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்றபோது, தனது சிறிய மகனின் வீட்டுக்கு மதுபோதையில் சென்ற மைத்துனர், அங்கு கடும் வாய்த்தர்க் கத்திலும் மோதலிலும் ஈடுபட் டுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

கைகலப்பில் படுகாயமடைந்த நபரை உடனடியாக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அனுமதித்தபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான மருமகன் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியா சீதையம்மன் ஆலய பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார் சந்தோஷ் ஜா







*நுவரெலியா நிருபர்*

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ஆஞ்சநேயர் ஜெயந்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் நுவரெலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் ஆலயத் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றன.

இந்தப் பூஜை வழிபாடுகளில் இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா கலந்துகொண்டார்.

# அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் இன்று (01) புதன்கிழமை 5.30 மணிக்கு ஊடகவியலாளர் ஐயாத்துரை கஜமுகன் 'நுகர்வுத் திறன்சார் ஊடக அரசியல்' என்ற தொனிப்பொருளில் உரையாற்றுகிறார்.

சங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் நடராஜா சிறீரஞ்சன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

# ரின் மீன்களுக்கு விதிக்கப்பட்ட வற் வரியை குறைக்க உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை



ரின் மீன்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரியைக் (VAT) குறைக்குமாறு இலங்கை ரின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கம் (CFMASL) அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ரின் மீன்களுக்கு கட்டுப்பாட்டு விலையை விதிப்பது பிரச்சினை இல்லையென்றாலும், அவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள VAT வரியைக் குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ரின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஷிரான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

VAT வரி குறைக்கப்படாவிட்டால் நாட்டு மீனவர்களே விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் இணக்கம் காணப்பட்டதன் பின்னரே ரின் மீன்களுக்கான கட்டுப்பாட்டு விலை அமுல்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

# புரவலர் ஹாஷிம் உமர் இந்தியா பயணம்



தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து கடந்த 28 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் இனிய நந்தவனம் மாத சஞ்சிகையின் 28 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 05 ஆம் திகதி திருச்சிராப்பள்ளி தில்லைநகர் ராம் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் பிரதம அதிதியாக இலங்கையின் இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமரும் சிறப்பு அதிதியாக தினகரன் நாளிதழ் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்வாண்டும் உலகத் தமிழ் படைப்பாளர்களின் படைப்புகளுடன் 200 பக்கங்களில் சிறப்பான ஆண்டு மலர் வெளியிடப்படவுள்ளது. அதன் முதல் பிரதியை பிரதம அதிதி புரவலர் பெற்றுக்கொள்வார்.

ஆண்டு விழாவை முன்னிட்டு துறைசார்ந்தோர் வெற்றித்தமிழன் மற்றும் வெற்றித்தமிழினி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். விருதுகளை புரவலர் ஹாஷிம் உமர் வழங்கி கௌரவிக்கவுள்ளார். இவ்விழாவில் இந்திய அரசாங்கத்தால் பத்மஸ்ரீ விருது பெற்ற தாமோதரன், தொழிலதிபர்கள், ராமநிதி, ஏ.ஆர். முஹம்மது அபூபக்கர் சித்தீக், இரா.தங்கையா, அனிதாடேவிட், சமூக சேவகர் கே.சீனிவாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். இந்நிலையில், இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக புரவலர் ஹாஷிம் உமர் 04 ஆம் திகதி இந்தியா பயணமாகிறார்.

# சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சி - 2025



*பேருவளை பீ.எம். முக்தார்*

பேருவளை, சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டிலும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் அனுசரணையுடனும் 'GEM SRI LANKA 2025' சர்வதேச மாணிக்கக்கல் மற்றும் ஆபரண கண்காட்சிக்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த சர்வதேச கண்காட்சியானது இம்மாதம் 08, 09 மற்றும் 10 ஆகிய தினங்களில் CINNAMON BENTOTA BEACH - SIGNATURE SELECTION HOTEL இல் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் இலங்கையின் முன்னணி இரத்தினக்கல் பிரபல வியாபாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்கக்கல் பிரபல ஏற்றுமதியாளர்கள் உட்பட துறை சார்ந்த பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் மாணிக்கக்கல் வர்த்தகத்தைச் சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச்செல்லும் முயற்சியாக 02ஆவது தடவையாகவும் இக்கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாவது கண்காட்சி நடைபெற்றதோடு, உள்நாட்டு, வெளிநாட்டு முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் கலந்துகொண்டனர்.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல், 'GEM SRI LANKA' தலைவர் ஹில்மி காஸிம் உட்பட சங்க உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்போடும் 2024 கண்காட்சி மிக வெற்றிகரமாக நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் அதிகரிக்கும் கழிவுகள்; குறைப்பதற்கு மாநகர சபை முயற்சி



கொழும்பில் அதிகரித்து வரும் கழிவுகளைக் குறைப்பதற்கான விசேட முயற்சியொன்றை கொழும்பு மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

குடியிருப்பாளர்களும் கொழும்புக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் நகருக்குள் கொண்டு வரும் கழிவுகளை முறையாக அகற்றுவதை உறுதி செய்யுமாறு கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பாலித நாணயக்கார கேட்டுக் கொண்டார்.

பண்டிகைக் காலங்களில் ஒட்டுமொத்த சுற்றாடல் பாதிப்பைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, அன்றாட நடவடிக்கைகளுக்காக கொழும்புக்கு வரும் நபர்கள் குப்பைகளை முறையாக அகற்றுவதைக் கடைப்பிடிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

"கொழும்பில் வசிப்பவர்கள் இப்பகுதியை சுத்தம் செய்வதில் பங்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், அன்றாட தேவைக்காக கொழும்புக்கு வரும் நபர்களும் கழிவுகளைக் குறைப்பதற்கும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை முறையாகப் பயன்படுத்துவதற்கும் பொறுப்பேற்க வேண்டும்.

சுமார் 6 இலட்சம் மக்கள் பொதுவாக கொழும்புக்கு வருகை தருகின்றனர். இது கணிசமான அளவு குப்பைகளை உருவாக்குகிறது. எனவே, கொழும்புக்கு வருவோரின் ஆதரவின்றி குப்பைகளைக் குறைக்க முடியாது. எனவே, கழிவுகளை அகற்றுவதில் ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

# கொழும்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

## உலக முஸ்லிம் லீக் அமைப்பினால் கையளிப்பு







*இக்பால் அலி*

கொழும்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 2,000 குடும்பங்களுக்கு உலக முஸ்லிம் லீக் அமைப்பினால் 12,000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

உலக முஸ்லிம் லீக் நிறுவனத்தினால் கொழும்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வத்தளை மற்றும் மெகொட கொலன்னாவ பகுதியில் உள்ள பல்லின மக்களுக்கும் உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு வெல்லம்பிட்டியவில் இடம்பெற்றது.

ராபிதா நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இம்ரான் ஜமால்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சவூதி அரேபிய உயர் ஸ்தானிகர் காலித் பின் ஹமூத் அல் - கஹ்தானி கலந்துகொண்டு உலருணவுப் பொருட்களை வழங்கிவைத்தார்.

இதன்போது 12,000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டது.

# வவுனியாவில் 50க்கும் மேற்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் உட்பட இருவர் துப்பாக்கியுடன் கைது!

(சிவகுமார் திவியா)

வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் 50க்கும் மேற்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் உட்பட இருவரை உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டதென சந்தேகிக்கப்படும் இரு இயந்திரங்களுடன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.



வவுனியா நகர், பூவரசங்குளம், நெடுங்கேணி, ஓமந்தை மற்றும் கனகராயன்குளம் என வவுனியா மாவட்டத்தின் பல பொலிஸ் பிரிவுகளிலும் ஏனைய மாவட்டங்களிலும் கத்திமுனைகளில் வீடுகளில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டமை என 50க்கும் மேற்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் தொடர்பில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சமந்த விஜேசேகரவின் ஆலோசனையில், வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மலன் பெரேராவின் வழிநடத்தலில், வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சாரங்க ராஜகுரு, பொலிஸ் பரிசோதகர்களான திசாநாயக்க (37348), ரன்வெல (61518), பொலிஸ் கான்ஸ்டபிள்களான சிந்தக (78448), விதுசன் (91800), சாரதியான திஸாநாயக்க (18129) ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பிரதான நபர் வீட்டில் தங்குவதில்லை என்பதுடன் வனப்பகுதிகளிலேயே தங்குவதை வழமையாகக் கொண்டிருந்தார். இந்நிலையிலேயே வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரின் விசேட நடவடிக்கையின்கீழ் 43 வயதுடைய குறித்த நபரை உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்படும் என சந்தேகிக்கப்படும் இரு இயந்திரங்களுடன் கைதுசெய்துள்ளதுடன், அவருக்கு உதவியாக செயற்பட்டார் என சந்தேகிக்கப்படும் 30 வயதுடைய நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பிரதான நபருக்கு எதிராக நீதிமன்றில் நான்கு திறந்த பிடியாணை மற்றும் திகதியிடப்பட்ட ஆறு பிடியாணை என்பன இருப்பதுடன் அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் கைதுசெய்யப்பட்ட இருவரையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவருக்கும் கேதீஸ்வரனுக்குமிடையில் கலந்துரையாடல்

(பு.கஜிந்தன்)



உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவருக்கும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனுக்குமிடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சுகாதார ரீதியான சவால்களை நிவர்த்தி செய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பாடசாலையின் சிற்றுண்டிச்சாலையின் தரத்தை உயர்த்துதல், துரித உணவு வகைகளையும் எண்ணெய் உணவுகளையும் பொதிசெய்த உணவுகளையும் தடைசெய்தல், கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து தூய்மைப்படுத்தல், தூயநீரை உறுதிப்படுத்தல், பெண்பிள்ளைகள் மத்தியில் அதிகரித்துள்ள ஈமோகுளோபின் குறைபாடு, கட்டிளமைப்பருவ உணவுப்பழக்கம் என்பன பற்றி தெளிவாகப் பேசப்பட்டது.

அத்துடன், 2025ஆம் ஆண்டு தீவிரமாக மேற்சொன்ன நடவடிக்கை எடுக்கப்படுமென பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உறுதியாக தெரிவித்தார்.

# மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி விடுதிசாலை மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடலும் நிர்வாகத் தெரிவும்

(ஜோசப் நயன்)



மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் டிலாசால் விடுதிசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்களுக்கான முதலாவது வருட ஒன்றுகூடல் நிகழ்வும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த சனிக்கிழமை (28) மாலை புனித டிலாசால் விடுதிசாலை கேட்போர் கூடத்தில் அருட்சகோதரர் செல்வதாஸ் தலைமையில் இடம்பெற்றது

"நினைவில் மகிழ நினைவுகள் தொடர" எனும் தொனிப்பொருளில் பழைய மாணவர்கள் மத்தியில் கட்டமைப்பொன்றை உருவாக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த ஒன்றுகூடலில் டிலாசால் விடுதிசாலையில் கல்வி கற்று தற்போது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசித்துவரும் நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர்.

அதேநேரம், டிலாசால் விடுதிச்சாலையில் கல்வி கற்று விடுதிசாலை பொறுப்பாளர்களாக கடமையாற்றிய அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ், அருட்சகோதரர் ஒகஸ் ரீன், அருட்சகோதரர் சந்தியாகு, அருட்சகோதரர் மனோ, அருட்சகோதரர் கிருபா உட்பட அருட்சகோதரர்களும் குறித்த விடுதிசாலையில் கல்வி கற்று தற்போது அருட்தந்தைகளாக பணி செய்யும் அருட்தந்தையர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர். தொடர்ச்சியாக குறித்த அமைப்பு பாடசாலை மற்றும் விடுதிசாலை நலன்சார்ந்து செயற்படுவதை அடிப்படையாகக்கொண்டு 2025 ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சங்கானை வைத்தியசாலை சூழலில் நாய்த்தொல்லை அதிகரிப்பு

## அச்சத்தில் நோயாளர்கள்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம், சங்கானை வைத்தியசாலையிலும் அதன் சுற்றாடலிலும் வைத்தியசாலையின் அருகிலுள்ள சங்கானை பிராந்திய வைத்திய அதிகாரி அலுவலகத்தை அண்மித்த சுற்றாடலிலும் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியசாலைக்கு சேவையைப் பெறச் செல்லும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.



வைத்தியசாலையின் வளாகம், பிரதான நுழைவாயில், அருகிலுள்ள வீதிகள் மற்றும் சந்திகளில் அதிகளவிலான நாய்கள் உலாவித் திரிகின்றன. இதனால் நோயாளர்கள் மட்டுமின்றி வீதியால் செல்வோரும் விபத்து ஏற்படுமோ அல்லது நாய்கள் கடிக்குமோ என்கின்ற அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லும்போது தாம் நாய்க்கடிக்கு உள்ளாகுவோமோ என்கின்ற அச்சம் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமின்றி வைத்தியசாலைச் சுற்றாடலில் அவை மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதால் சுகாதாரப் பிரச்சினையும் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

# ஏசி மிலனுக்கு புதிய பயிற்சியாளர் நியமனம்



இத்தாலிய சீரி ஏ அணியின் ஏசி மிலன் தனது புதிய தலைமை பயிற்சியாளராக செர்ஜியோ கான்சிகாவோவை திங்கட்கிழமை நியமித்துள்ளது.

முன்னாள் ரோமா பயிற்சியாளர் பொன்சேகா இந்த கோடையில் ரோசோனேரியின் பயிற்சியாளர் பதவியை ஏற்றுக்கொண்டார். ஏசி மிலன் லீக்கில் எட்டாவது இடத்தைப் பிடித்தது. ஏழு முறை சம்பியன்ஸ் லீக் வெற்றியாளர் இரண்டு தொடர்ச்சியான தோல்விகளுடனும் நான்கு தொடர்ச்சியான வெற்றிகளுடனும் உள்ளது.

ஞாயிற்றுக்கிழமை ரோமாவுடனான ஏசி மிலனின் சீரி ஏ ஆட்டத்தின் தொடக்கத்துக்கு முன்பே கிளப் ஏற்கனவே முடிவெடுத்திருந்தது. அது இறுதியில் 1:1 என முடிந்தது. லாசியோ, இண்டர் மிலன் ஆகிய கிளப்களுக்கான முன்னர் கான்சிகாவோ விளையாடினார்.

50 வயதான அவர் தனது புதிய கிளப்புடன் ஜூன் 2026 வரை ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டார். மேலும் அவர் வெள்ளிக்கிழமை ஜுவென்டஸுடன் சூப்பர்கோப்பா இத்தாலியானாவின் அரையிறுதியில் அறிமுகமாக உள்ளார். கான்சிகாவோவின் மகன் பிரான்சிஸ்கோ பியான்கோனேரியின் அணியில் இருக்கிறார். இது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாட மூன்று அணிகள் போட்டி

2025ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான இறுதிப் போட்டியில் விளையாட தென் ஆபிரிக்கா தகுதி பெற்றுள்ளது. இறுதிப் போட்டியில் தென் ஆபிரிக்காவுடன் விளையாடுவதற்கு அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகள் களத்தில் உள்ளன.

2021, 2023 ஆகிய இரண்டு இறுதிப் போட்டி சம்பியன்ஷிப்களில் விளையாடி தோல்வியடைந்த மூன்றாவது முறையும் இறுதிப்போட்டியில் விளையாடும் என எதிர்பார்க்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்ததால் இரண்டாவது இடத்தில் இருந்த இந்தியா மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

அவுஸ்திரேலிய அணி 61.46 வெற்றி சதவீதத்துடன் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கு இன்னும் மூன்று டெஸ்ட் போட்டிகள் எஞ்சியிருக்கின்றன. இதில் இந்தியாவுக்கு எதிராக சிட்னி டெஸ்ட் போட்டியும் பின் இலங்கையில் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் உள்ளன. இந்த மூன்று டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியா ஒன்றில் வெற்றி பெற்றால் கூட இறுதிச்சுற்றுக்கு செல்ல முடியும். இதனால் அவுஸ்திரேலியா இரண்டாவது இடம் பிடிக்கவே அதிக வாய்ப்பு இருக்கிறது.

இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தை இந்தியா பிடித்திருக்கிறது. இந்தியா தற்போது 52.78 வெற்றி சதவீதத்துடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்தியா இறுதி சுற்றுக்கு செல்ல வேண்டுமென்றால் அவர்களுக்கு சாதகமான முடிவுகள் அமைய வேண்டும்.

புத்தாண்டில் தொடங்கும் சிட்னி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி கண்டிப்பாக வெற்றி பெற வேண்டும். இல்லையெனில் இந்தியா இறுதிப்போட்டிக்கு செல்லும் வாய்ப்பு இருக்காது. அது மட்டுமில்லாமல் அவுஸ்திரேலியா இலங்கை அணிகள் மோதும் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி குறைந்தபட்சம் ஒரு போட்டியிலாவது வெல்ல வேண்டும். இல்லையெனில் இரண்டு போட்டியும் சமனில் முடிய வேண்டும். இது நடந்தால் மட்டுமே இந்திய அணி இறுதிப்போட்டிக்கு செல்லும்.

இந்தப் பட்டியலில் நான்காவது இடத்தில் நியூஸிலாந்து அணி இருந்தாலும் பைனலுக்கு செல்லும் வாய்ப்பை ஏற்கனவே இழந்து விட்டது. ஐந்தாவது இடத்தில் இலங்கை அணி இருக்கிறது. இலங்கை அணி 45.45 வெற்றி சதவீதத்துடன் உள்ளது. இலங்கை அணி பைனலுக்கு செல்ல வேண்டும் என்றால் இந்தியா அவுஸ்திரேலியா மோதும் சிட்னி டெஸ்ட் போட்டி சமனில் முடிய வேண்டும். அது மட்டுமல்லாமல் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவை இலங்கை இறுதிப் போட்டிக்குச் செல்ல முடியும்.



# ஒரே டெஸ்ட்டில் 04 சதங்கள், 02 இரட்டை சதங்கள்

கிரிக்கெட் உலகில் அறிமுகமாகிய சில ஆண்டுகளிலேயே டெஸ்ட் அங்கீகாரம் பெற்ற ஆப்கானிஸ்தான் அணிக்கும் நீண்ட ஆண்டுகளாக கிரிக்கெட் ஆடும் சிம்பாப்வே அணிக்கும் இடையேயான டெஸ்ட் போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது.

சிம்பாப்வே நாட்டில் நடக்கும் முதல் டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணிக்காக சீன் வில்லியம்ஸ் 154, கேடன் கிரெக் எர்வின் 104, ப்ரையன் பென்னெட்டும் 110 ஓட்டங்கள் அடித்தனர். சிம்பாப்வே அணி 586 ஓட்டங்கள் அடித்தது.

முதல் இன்னிங்ஸில் இமாலய ரன்களை குவித்த சிம்பாப்வே அணி ஆப்கான் விக்கெட்டுகளை எளிதில் வீழ்த்திவிடலாம் என்று எண்ணியது. தொடக்க வீரர் அடல் 03, அப்துல் மாலிக் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ரஹமத் - கேப்டன் ஷாகிதி ஜோடி நங்கூரம் போல நின்றது.

அபாரமாக ஆடிய இருவரும் சதம் விளாசினர். சதம் விளாசிய பிறகும் பவுண்டரிகளாக விளாசினர். இவர்களைப் பிரிக்க கெப்டன் கிரெக் எர்வின் எடுத்த எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை. சதம் விளாசி அசத்திய ரஹமத் இரட்டை சதம் விளாசினார். 64 ஓட்டங்களில் சேர்ந்த இந்த ஜோடி 428 ஓட்டங்களில்தான் பிரிந்தது. ரஹ்மத் 424 பந்துகளில் 23 பவுண்டரி 03 சிக்ஸருடன் 234 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த ஷஷாயும் சிம்பாப்வே அணியைச் சோதித்தார். அவரும் சிம்பாப்வே பந்துவீச்சை சிதைக்க மறுமுனையில் கெப்டன் ஷாகிதி இரட்டை சதம் விளாசினார். அவர் இரட்டை சதம் விளாசிய சிறிது நேரத்தில் ஷஷாய் சதம் அடித்தார். சிறப்பாக ஆடிய ஷஷாய் ஆப்கானிஸ்தான் 639 ஓட்டங்கள் எடுத்தபோது 113 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

250 ஓட்டங்கள் அடிப்பார் என எதிர்பார்த்தபோது ஷாகிதி 246 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 474 பந்துகளில் 21 பவுண்டரியுடன் 246 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 197 ஓவர்களில் 699 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தப் போட்டியின் கடைசி நாளான இன்று சிம்பாப்வே அணி விக்கெட் இழப்பின்றி இரண்டாவது இன்னிங்ஸில் ஆடி வருகிறது. இந்தப்போட்டி டிராவை நோக்கிச் செல்லும் நிலையில், ஒரே டெஸ்ட் போட்டியில் 04 சதங்கள் மற்றும் இரண்டு இரட்டைச் சதங்கள் விளாசப்பட்டதற்கு பேட்ஸ்மேன்களை பலரும் பாராட்டி வருகின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7